டிசெம்பர்/ஜனவரி

$1



மலர். 1 இதழ். 3

# ரோஜா

இரு மனங்கள் இணைந்த பின்னே
இரு உடலைப் பிரிப்பதும் ஏன்?
காதலரைப் பிரித்தாலும் - தூய
காதல் என்றும் அழிவதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MAHARANI FASHIONS**



கூறைப் புடவைகள்,

காஞ்சிபுரம்,

நவநாகரீகப்
பட்டாடைகள்,

பனாறிஸ், மணிபுரி,

தன்ச்சோய், காஷ்மீர்,

தர்மாவரம்,

மைசூர் சில்க்

போன்றவற்றிற்கு

ஒரு முறை
விஜயம் செய்து
பாருங்கள்

# மகாராணி
# பாஷன்ஸ்

1417 GERRARD
STREET EAST,
TORONTO,ONT.
M4L 1Z7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை இலக்கிய காலாண்டு மலர்

# ரோஜா

மலர். 1 இதழ். 3

ஆசிரியர்.
**T.V.L. ஆனந்த்.**

வடிவமைப்பு/அச்சமைப்பு/பிரசுரம்/விளம்பரம்.
**T.V.L.A. Publications**

அட்டைப்படம்.
HARAN GRAPH

விநியோகம்.
**பவன்**
**சங்கர்** [ ACI (சுவிஸ்) ]
**நிரஞ்சன்** (ஜேர்மனி)
**இந்திரன்** (பிரான்ஸ்)

ஓவியம்.
**ரூபி** - அஜின்கோட் கல்லூரி மாணவி
**சசி** - HARAN GRAPH
**சுகந்தி** - டொன்மில்ஸ்
**நிலா** -

அச்சகம்.
**Quality Printing Services**

**Articles/Advertisements**
TEL: (416) 425 2884
FAX: (416) 425 2462

**Address:-**
"ROJAH"
F.P.P.O., P.O.BOX 45593,
747 DON MILLS RD, DON MILLS,
ONT. M3C 3S4, CANADA.

## மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!.......

## எம்மை நாமே கேட்போமே!!!

நாம் இழந்துவிட்ட உரிமையை மீளப் பெறுவதற்காக ஈழத்து மண்ணில் உயிரைத் தியாகம் செய்த எமது தியாக தீபங்கள் வணக்கத்திற்குரிய தெய்வங்கள்!

அந்த அணையாத தியாக தீபங்களின் எதிர்பார்ப்புகள் கனடாவையோ அல்லது ஐரோப்பிய நாடுகளையோ நாடியிருந்தால், எம்மைப் போன்று சகல வசதியுடன் அவர்களாலும் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அத்தியாகிகள், தமிழ்மீது கொண்ட காதல்........., தமிழன் என்ற உணர்வில்......., தனக்கொரு நாடு வேண்டும் என்று தமது உயிரைக்கூட பெரிதாக மதியாது எவ்வளவோ கஷ்டங்களுக்கும், துயரங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து, உயிரைத் தியாகம் செய்த, அந்த தியாக தீபங்களின் மதிப்பை அறியாத எம்மவர்கள், எமது இளையதலைமுறையினர் சிலரின் சிந்தனையில்லாத நடவடிக்கைகள் தமிழையும், தமிழினத்தையும் தலை குனிய வைப்பது மட்டுமல்ல, எமது உரிமைக்கா போராடும் ஈழவர்கள் பயங்கரவாதிகள் என்று மற்றய இன மக்களை எண்ண வைப்பதும்......, தமிழர்களை மதிக்காது கேவலமான ஒரு கண்ணேட்டத்துடன் பார்க்கவும் வைக்கின்றது.

**இதற்காக நாம் என்ன செய்யப் போகின்றோம்?**

தமிழ் மொழியை கற்பதற்காக இந்த அரசாங்கமே பாதையமைத்துக் கொடுத்திருக்கும் போதும், தமிழை கற்க என்ன அவசியம்? என்று எண்ணும் **எமதுவருங்கால மன்னர்களை தமிழன்னை ஏற்கப்போகின்றாளா?**

எம்மை நாமே கேட்போமே!!!
**நாம் தமிழர்கள் என்ற உணர்வுடன்.......**
**"தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியாளப் புறப்பட்டான் புட்டபர்த்தி சச்சக்ரவர்த்தி!

**வைத்தியக் கலாநிதி அருணா கணேசாள்**
(தலைவர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தொண்டர், டொன்மில்ஸ்)



புவியாளப் புறப்பட்டான்
புட்டபர்த்தி சச்சக்ரவர்த்தி - மாந்தர்க்கு
புனர்வாழ்வு எய்திடவே
புத்துலகைப் படைத்திட்டான்!
தவியாகத் தவித்துவிடும்
தருமத்தைக் காத்திட்டான் - என்றும்
தணியாத தாகத்தைத்
தடுத்தாண்டு கொண்டிட்டான்!
கவியரகாய் வாழ்ந்திங்கே
கவிமழையே பொழிந்திட்டான் - உளங்
கனிந்திடவே கருணைதனைக்
கைநிறையக் கொடுத்திட்டான்!
செவியார அருளமுதைச்
செகமெங்கும் இறைத்திட்டான் - பிறவி
சென்மமதுங் கடைத்தேற
செகத்குருவாய் நிலைத்திட்டான்!
"அங்கவை"

**"பிறப்பும் இறப்பும் பிணியும் மூப்புமில்லா, சிறப்புச்சேர் செல்வமதாய்த் திகழ்வதே தெவ்வீகம்"**
என்பது கவியின் கூற்று!

**"தருமம் தலைசாயும் போது நான் தலையெடுப்பேன்"**
என்பது கீதாச்சாரியின் வாக்கு!

இக்கூற்றும் வாக்கும் என்றுமே பொய்ப்பதில்லை என்பதை மனிதப் பிறப்பெடுத்து இன்றைய ஆன்மீக உலகத்தை ஆட்டிப்படைக்கும் அவதாரியான பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருள்வாழ்வு நிலை நாட்டி வருகின்றதைக் காண முடிகின்றது.

"சாயிராம்" இச்சொல் இன்று பாரெங்கும் பரவி நிற்கும் சாயிபக்தர்களின் குரல்மூலம் எழுதப்படும் ஒரு தாரக மந்திரமாக இருந்து வருவதைக் கேட்க முடிகின்றது. "இறைவனைக் காணாத கண்களென்ன கண்களோ! அவன் குரல் கேட்காத செவிகளென்ன செவிகளோ! அவன் புகழ் பாடாத நாவென்ன நாவோ!" என்ற வாக்கியங்களில் தான் எத்தனை உண்மைகள் பொதிந்திருக்கின்றன! அதுவும் பாபாவின் விடையத்தில் இவைகள் எவ்வாறு பொருந்தி விட்டன.

நவம்பர் 23, உலகெங்கும் பரவிநிற்கும் சாயி பக்தர்களுக்கு இத்திகதி முக்கியமானது, புனிதமானது, போற்றித் துதித்துக் கொண்டாடத்தக்கது. ஆம்! அன்று தான் பகவான் பாபாவின் பிறந்ததினம். கலியுக தெய்வம் அவதரித்தநாள்! பக்தர்கள் கொண்டாடும் திருநாள்.

1926ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் திகதி இந்தியாவிலுள்ள ஆந்திராபிரதேசத்தில் "புட்டபர்த்தி" என்னும் ஓர் குக்கிராமத்தில் சாயி பாபா அவதரித்தார். தாயின் பெயர் ஈஸ்வராம்பாள், தந்தையின் பெயர் கொண்டப்பராஜு. இவருக்கு இரு மூத்த சகோதரிகளும், ஓர் இளைய சகோதரரும் உண்டு.

இளவயதிலேயே தம் இறைசக்தியை இலைமறை காயாக அறிவித்த பாபா, தமது 14ஆம் வயதில் "தாம் சீரடி சாயி பாபாவின் மறு அவதாரம் என்று பிரகடனம் செய்து கொண்டார். அத்தோடு அவர் நின்று விடவில்லை. அதற்கான பல அத்தாட்சிகளை நிரூபித்து அக்காலத்தே வாழ்ந்திருந்த சீரடிபாபாவின் பக்தர்களோடு பகிர்ந்து கொண்டு அதை நிர்ணயம் செய்து வைத்தார் தவிர அன்று முதல் இன்று வரை மக்களை நல்வழிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரப் பணியில் அயராது ஈடுபட்டு வரலானார். தாம் அவதரித்த குடும்பத்தைத் துறந்த இவருக்கு, இன்று உலகம் முழுவதும் பக்தர் குடும்பம் பல்கிப் பெருகி விட்டன. இதன் நிமித்தம் உலகப் படத்தில் பொட்டிட்டுக் காட்டவும் முடியாத அளவிற்கிருந்த "புட்டபர்த்தி" என்னும் கிராமம், இன்று அகிலவுலகப் புகழ் பெற்ற புண்ணிய கேத்திரமாக உயரக்காரணமாகி விட்டது.

இன்று பல்நாட்டவரும், பல்மொழி பேசுபவர்களும், பல இனத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி ஒட்டு மொத்தமாக பகவான் பாபாவை "தெய்வத்தின் திருவுரு" என தெட்டத் தெளிவுடன் கண்டுகொண்டு ஆராதிக்கின்றனர். அப்படி என்றால் நெருப்பில்லாமல் புகையுண்டாகுமா? உண்டாகாது. அத்தகைய சக்திவாந்த ஆன்மீக நெருப்பு இளம் பிராயத்தில் சுடர்விட்டு எரியும்போது தெரிந்த ஒரு சுடரினை உதாரணத்திற்காக ஒப்பிட்டு நோக்குவோமாக.

ரஷ்ய நாட்டில் நாத்திகம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும் நேரம்! ஸ்டாலினின் பயங்கர ஆட்சி ஆன்மீகத்தை அழித்துக் கொண்டிருக்கும் வேளை! ஆன்மீகத்தை எந்த அரசினாலும் அழித்துவிட முடியுமா? முடியாது. ஆன்மீக வாதியான "உல்.்ப் மெஸ்லிங்" என்னும் ரஷ்யரால் ஸ்டாலினின் ஆன்மீக வாதம் தளரலாயிற்று. அச்சமயம் மெஸ்லிங் ஆன்மீகப்பசிக்கு இரைதேடி இந்தியா வந்தார்.

1937ஆம் ஆண்டு, பகவான் பாபாவிற்கு 11வயது. "கடப்பை" ரயில்வே ஸ்டேசன் முன் பல சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார். அச்சமயம் ஒரு வெள்ளையர் ஓடிவந்து சிறுவன் சத்தியாவை இருக அணைத்தவாறு கட்டி முத்தவிட்ட வண்ணம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார். அதுமட்டுமல்ல "நான் உன்னைக் கண்டு கொண்டேன்! நான் மிகவும் ஆனந்த மடைகின்றேன்! உன்னை அன்புடன் நேசிக்கின்றேன்!" என பித்தனைப் போல் பிதற்றுகின்றார். இதுதான் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய காட்சியோ!

யார் அந்த வெள்ளையர்? என்ற கேள்விக்கு... "அவர் தான் மெஸ்லிங்" என பகவானிடமிருந்து பதில் வருகின்றது. அப்புண்ணிய மனிதரின் ஆன்மீகப் பசி அடங்கிவிட்டது. பேரானந்தப் பெருவழி கண்களுக்குப் புலப்பட்டுவிட்டது. எதைத்தேடி வந்தாரோ அது கிடைத்து விட்டது. ஆம்! இரும்பைத்தானே காந்தம் கவரமுடியும்! இதைவிட வேறு உதாரணம் பகவான் பாபாவின் இறை சக்திக்கு தேவையில்லை எனலாம். ஆனால் பல உதாரணங்கள் உள. அவற்றை இங்கு கூறப்புகில் கட்டுரை பாரதமாக விரிவடைந்து விடாதோ!

"கடவுளைக் கண்டீர்களா?" என்று அன்று கேட்ட நரேந்திரருக்கு "ஆம்! கண்டேன். உன்னைக் காண்பதை விட இன்னும் தெளிவாகக் கண்டேன்!" எனப் பதிலளித்தார் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர். இதன் விளைவாக ஒரு விவேகானந்தர் அவதரித்தார். அவர் மூலம் சனாதன தருமம் அகில உலகெங்கும் பல்கிப் பெருக வாய்ப்புண்டாகிற்று.

ஆனால் இன்று அதே விவேகானந்தர் "இலங்கையில் மீண்டும் அவதரித்துள்ளார். அவர் விரைவில் என்னிடம் வரப்போகின்றார்." என பகவான் பாபா கூறிய அருள் வாக்கு சாயிபக்தர்களுக்கின்றி ஏனையோருக்கு தெரியாதென்றே கூறலாம். அது மட்டுமல்ல பகவானால் படைக்கப்பட்ட பல விவேகானந்தர்கள் இன்று பாரெங்கும் பரந்துவிரிந்து ஆன்மீக சேவையாற்றி வருவது குறிப்பிடத் தக்கதே.

இக்கூற்றினை பரமஹம்சரே பின்வரும் வசனங்கள் மூலம் தெளிவுபடுத்துகிறார். "சச்சிதானந்தமாகிய விருட்சத்தில் ராமர்கள் - கிருஷ்ணர்கள் - புத்தர்கள் - ஏசுக்கள் - நபிகள் முதலிய பல பூங்கொத்துக்கள் கணக்கின்றி பூத்துக் குலுங்குகின்றன. அவற்றுள் அவ்வப்போது ஒன்றிரண்டு பூமியில் விழுந்து பிரம்மாண்டமான அவதார விருட்சங்களாக மாறுகின்றன. இவ்விருட்சங்கள் அளப்பரிய ஆன்மீகக் காற்றுகளுக்கிடையே ஆனந்தமான நிழலினைத் தந்து பல முன்னேற்றங்களை உண்டாக்குகின்றன."

இப்பொன்வாக்கு பகவான் பாபாவிடயத்தில் எவ்வாறு பொருந்தி இருக்கின்றன என்பதை இன்று இவ்வுலகே கண்டு வியக்கின்றது. அதே வேளையில் பற்பல எதிர்ப்புக்களும், ஏளனங்களும் எழத்தான் செய்கின்றன. இந்நிலை எல்லா அவதாரங்கும் ஏற்பட்ட ஒரு நிலைதான். பகைவனுக்கருளும் நெஞ்சத்தோடு, பக்தபரிபாலனம் செய்து வரும் பகவான் பாபாவின் தெய்வீகம் அளப்பரியதாக உலகை வலம் வருவதில் ஆச்சரியமில்லை. இது சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்திதான் என்பதை பாபாவின் ஆன்மீகசக்தி ஆணித்தரமாக எடுத்துக்காட்டி வருகின்றது.

"என் உண்மை உருவை வேதங்களும் காணச் சக்தியற்றன. தவத்தாலோ, தானத்தாலோ, வேள்விகளாலோ என் உண்மைச் சொரூபத்தைக் காணயியலாது. பக்தியால் மட்டுமே என் உண்மையை உணரவும் அறியவும் முடியும்" என்று கீதையில் கண்ணன் உரைத்த மொழிதான் பகவான் பாபா விடயத்திலும் பொருத்தமாக இருந்து வருவதைக் காண முடிகின்றது.

அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மனித குலத்தை திசைதிருப்பவே அவதாரப்பணியாற்றி வருகிறார் பகவான் சத்திய சாயி பாபா. சூட்சும உடலில் உலகை வலம் வரும் பாபாவின் ஸ்தூல உடல் முதல் முதலாக "நைரோபி" சென்று இடியமீனைச் சந்தித்தது. காரணம் இராவணனை அழித்து இலங்காபுரியைக் காத்தது போல, கறுப்பரினத்தைக் காத்து ரட்சித்தார் பகவான். அல்லாவிடில் அழிவின் தொல்லை எல்லையை மீறியிருக்கும். கறுப்பினமே காணாமற் போயிருக்கும்.

"பசுக்கள் யாவும் கொட்டிலில் ஒடுங்கு வதைப்போல் சகல தெய்வங்களும் இவனுள் அடக்கம்" என்று வேதநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் கொடுப்பது பாபா விடயத்திலும் பொருந்தி நிற்கின்றது. அன்று ஒரு மெஸ்லிங்கிற்குக் காட்சி தந்த அவதார உருவத்தின் நாமம் இன்று "கம்யூனிசம்" கட்டோடு அழிக்கப்பட்ட ரஷ்யாவில் பல சாயி சென்டர்கள் உருவாக்கப்பட்டு வழிபாடு நடாத்தும் அளவிற்கு அருள்பாலித்துள்ளது. ஆன்மீகம் இன்று கொடி கட்டிப் பறக்கின்றது அங்கு!

இப்படியான திருவிளையாடல்களை, வெறும் சித்துக்களாலும், செப்படி வித்தைகளாலும், மந்திர தந்திர உபாயங்களாலும் ஒரு சாதாரண வெறும் மனித சக்தியால் ஆற்ற முடியுமா? அருட்சக்தியின் அன்புப் பிரவாகத்தின் முன் கடலும் நீரும் காததூரங்களும் கைப்பிடிக்குள்தான் அடங்குமென்பதை அவதார சாயி செயலில் காட்டி நிற்கின்றார்.

"அன்பே சிவம்" என்கின்ற திருமந்திர வாக்கினைச் சிரமேற்கொண்டு இயங்குவதுதான் சாயி அவதாரம்." அன்பே உருவான நான், அன்புடன் பேசி, அன்புப்பாதையில் உங்களை அழைத்துச் செல்லவே அவதரித்து வந்துள்ளேன். அன்புப் பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டால் அழிவுப்பாதை கண்களுக்குக் கூட புலப்பட முடியாது" என்பது தான் அவரின் அருள் வாக்காகும்.

ஆனால் உண்மையினை உணராத மக்கள் கூட்டம், சத்தென்றும், பித்தென்றும் பிதற்றித் திரிகின்றன. ஏன் அண்மையில், அவதாரியின் உயிருக்கே உலைவைக்கும் ஊன்மத்த செயலிலும் ஈடுபட்டுவிட்டது. முடிந்ததா காரியம்? இல்லை, தருமந்தான் வென்றது. அதர்மம் அழிந்தது. தோல்வியின் மூலம் தன்வினையே தன்னைச் சுட்டுக் கொள்ள அங்கு சில உயிர்கள் உடலை விட்டுச் சென்றது உலகறிந்த கதையாகிவிட்டது! இதற்கு விடை பகவானே கூறுகிறார். "நான் நினைத்தாலன்றி என்னுயிர் என்னுடலைவிட்டுப் பிரிய முடியாது. எந்த சக்தியாலும் என்னை எதுவும் செய்ய முடியாது. நானெடுத்த மானுடம் 96வயதுவரை தொடர்ந்து தெய்வீக பணியாற்றி முடிந்த பின்னரே மறையும்" என்ற சத்திய வாக்கு தவற முடியுமா? அருள் வாக்கை எவராலும் அழிக்கத்தான் முடியுமா? யாவும் "போகட்டும் கண்ணனுக்கே" என்று காற்றோடு கலந்து நிற்கும் சத்தியத்தைத் தான் பகவான் சத்திய சாயி பாபாவின் வாழ்க்கை எடுத்துக் காட்டி நிற்கின்றது.

அறங்காக்க அவதரித்த சாயி பாபாவின் அருட்பணி சமயத்துறையோடு நின்றுவிடவில்லை. "மானிட சேவையே மாதவ சேவை" என்ற திருவாக்கைப் பெருவாக்காகக் கொண்டு மனித மேம்பாட்டுத்துறையில் பெரும்பணியாற்றி வருகின்றது. "வைத்யோ நாராயண ஹரி" என்ற வைத்தீகக் குறிக் கோளுக்கிணங்க, பிணிதீர்க்கும் பெருந்துறையாம் மருத்துவத் துறையிலும், கல்வி மேம்பாட்டுத் துறையிலும் வியக்கத்தக்க செயல்களை ஆற்றி வருகின்ற சாயி சகாப்தம்.

ஈராண்டுகளுக்கு முன் "பக்கிங்ஹாம்" அரண்மனை போன்ற அழகுக் கலைகளுடன் சூப்பர் ஸ்பெஷல்" மருத்துவ மனையை ஆரம்பித்து இலவச மருத்துவ பணியாற்றி வருகிறார். இதுபோல் எட்டாம் வகுப்புக்கு மேல் எட்டிப்பார்க்காதவர், இன்று ஒரு பெரிய பல்கலைக்கழகத்திற்கே அதிபதியாக இருந்து அருளாட்சி செய்துவருகிறார். பொதுவாக எந்த அரசாங்கத்தால் கூட நடாத்த முடியாதவாறு கோடிக்கணக்கான ரூபாயில் முதலீட்டில் செயற்படும் இத்திருப்பணிகளை சாதார மனித சக்தியால் முடியாததென்பதை பகவான் பாபா நிரூபித்து வருகின்றார்.

இவ்வாறு பக்தர்களை ஆட்டுவித்துப் பாட்டுவித்து ஆனந்தக் கடலில் ஆழ்த்திவரும் பகவான் பாபாவின் பக்தர்கள் கனடாவிலும் நாளுக்கு நாள் பல்கிப் பெருகி விட்டனர். கடந்த நவ.23 அன்று ரொரன்டோ வாழ் பக்தர்கள் ஒன்றுகூடி பகவானின் பிறந்த தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்திருந்து அவதார சாயிக்கு "ஆனந்த ஊஞ்சல்" ஆட்டி பஜனை பாடிக்கழித்தனர்.

இத்தொண்டர் குழாத்தில் ஈழத்தவர்களையே முதன்மையாகக் காண முடிந்தது. காலத்தின் கோலத்தால் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் நொந்து போன நைந்த நெஞ்சங்களுக்கு பாபாவின் அருட் திருவாக்கும், ஆன்மீக வழிகாட்டலும், பாலைவனத்து நீரைப்போல் நெஞ்சினை நெட்டுநகச் செய்து விட்டன. பற்றற்றான் பற்றினை பற்றிநிற்கும் பாரம்பரிய சமயவுணர்வினை, பாபா பக்தர்களாகிய உலகத் தமிழினமே பற்றி நிற்கும் பாங்கானது போற்றத்தக்கதே. இனி எம் நாட்டிற்கும் மொழிக்கும் விடுதலை வந்தேதீரும் என்பதில் ஐயமில்லை.

கடல்கடந்து காததூரம் வந்த இடத்திலும், கடவுளார்க்கு கலைக்கோவில்கள் கட்டி வழிபாட்டுத் துறையில் வழுவாதிருப்பதைப் போல, சாயிபாபா வழிபாட்டு நிலையங்கள் பல கனடாவில் உருவாக்கப்பட்டு விட்டன. இவற்றை ஈழத்தமிழினமே ஆண்டு கொண்டாடும் அழகினைக் காணும்போது, ஆன்மீகத்தை வெறுக்கும் நெஞ்சங் கூட ஒருமுறை "அரோஹரா" பாடி மகிழ்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. உருகாதோர் உள்ளத்தையும் உருக்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

இங்குதான் "மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியானது யாவற்றையும் ஆட்டிப்படைக்கின்றது" என்பது புலனாகின்றது. இதனையே "சீரார் அருளினால் சிந்தனைத் திருத்தி ஆண்ட சிவலோகா" என திருவாசகம் தெய்வீகத்தைச் செந்தமிழினால் சந்துபாடி மகிழ்கின்றது. ஆதவனின் வெளிச்சத்தை அச்சரத்தில் எழுதிக்காட்ட முடியுமா? அவதாரத்தின் அருட்கடாட்சத்தை அளவிடத்தான் முடியுமா? சிவசக்தி சொரூபமான பகவான் சாயிபாபாவிற்கு இதைவிட வேறு எந்த வாசகமும் தான் பொருத்தமாகுமா?

எனவே, அன்பின் திருவுருவான ஆன்மீகப் பெருமக்களே, மந்திரமும் மறைபொருளும் ஆனான் தன்னை, மந்திரிப்பார் மனத்துள்ளானை, வேதமந்திர சொரூபனை, சச்-சித்- ஆனந்தனை, நாடும் வீடும் போற்றும் நாயகனை, பல்லுருவில் பக்தர்களை ஆட்கொள்ளும் பர்த்தீசனை, சற்குரு சாயீசனை, அவனருளால் அவன் தாள் வணங்கிநின்று நிதம் பல்லாண்டு கூறுவோமாக!

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய வாசகர் நெஞ்சங்களே!

இவ்வாண்டு (1993) காலாண்டு மலராக மலர்ந்து, வாசகர்களின் கைகளிலே தவழ்ந்த "ரோஜா" இதழ், மலரப்போகும் புது ஆண்டில் (1994) மாத மலராக வெளிவர இருக்கின்றது.

## அட்டைப் படக் கவிதைப் போட்டி:

ஜூலை 1993 முதல் டிசெம்பர் 1993 வரை வெளியான "ரோஜா" வின் அட்டைப் படக் கவிதைகள் ஆசிரியராலேயே எழுதப்பட்டு வந்தன. ஆனால் மலரப் போகும் புது ஆண்டில், மலரப் போகும் "ரோஜா" இதழ்களுக்கான அட்டைப் படக் கவிதைகளை போட்டிகளாக நடத்துவதற்கு **T.V.I.A. பப்ளிக்கேஷனால்** முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1994 முதல் மாதந்தோறும் 15ஆம் திகதிகளில் "ரோஜா" இதழ்கள் வெளியிடப்படும்.

## போட்டி விபரங்கள்:

★ அட்டைப் படத்தை வர்ணிக்கும் வகையில் கவிதைகள் அமைந்திருக்க வேண்டும்.

★ கவிதைகள் 10 வரிகளுக்குக் குறையாமலும், 20 வரிகளுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

★ ஜனவரி/பெப்ரவரி 1994 இதழின் அட்டைப் படக் கவிதையை மார்ச் 10ஆம் திகதிக்கு முன் "ரோஜா"வுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். இதே போன்று தொடர்ந்து வரும் இதழ்களுக்குரிய அட்டைப் படக் கவிதைகளை தொடர்ந்து வரும் மாதங்களில் 10ஆம் திகதிக்கு முன்னர் "ரோஜா"வுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

★ சிறந்த கவிதை ஒன்றுக்கு சிறந்த பரிசு உண்டு. ★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
( உங்கள் கவிதைகளை "ரோஜா"வின் முகவரிக்கோ அல்லது FAX க்கோ அனுப்பிவையுங்கள் )

**எமது "ரோஜா" வாசகர்கள், விளம்பரத்தாளர்கள். வியாபார ஸ்தாபனங்கள் அனைவருக்கும் எமது நத்தார், புது வருட வாழ்த்துக்கள்.**

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்

~ கவிஞர் கந்தவனம் ~

செவ்வந்தி மருக்கொழுந்து
செவ்வரத்தை அலரிமுல்லை
ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்
உயர்கலைஞன் படைக்கும் விதம்!

கொடியிலொன்று கோட்டிலொன்று
குளத்திலொன்று நிலத்திலொன்று
வடிவுகளோ வகைவகையாம்
வண்ணங்களோ எண்ணங்களாம்!

மல்லிகைபோல் காந்தளில்லை
வன்னியைப்போல்
கொன்றையில்லை
அல்லியைப்போல் கமலமில்லை
ஆயிரங்கள் அழகுகளே!

அவளிடத்தில் நிறமிருக்கும்
இவளிடத்தில் மணமிருக்கும்
அவனிடத்தில் உளமிருக்கும்
இவனிடத்தில் உடலிருக்கும்!

பனிக்காலம் வெயிற்காலம்
பருவங்கள் பலவிதமாம்
மனக்கோலம் மதிக்கோலம்
வகைவகையாம் கலைக்கோலம்!

குஞ்சொன்று குட்டியொன்று
கூவுதொன்று தாவுதொன்று
பஞ்சொன்று பாரமொன்று
பழையதொன்று புதியதொன்று!

கல்மண்ணீர் காடுமலை
கடலாறு விலங்கினங்கள்
புல்பூண்டு பறைவையினம்
பூச்சிபுழு ஊருமுயிர்-

கனிவகைகள் தானியங்கள்
காய்கறிகள் கவின்மணிகள்
நனிவேக நாள்கோள்கள்
நாடுநகர் நாகரிகம் -

ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம்
ஒன்றையொன்று தாங்குவதில்
ஒவ்வொன்றும் ஒற்றுமையாம்
ஒற்றுமையில் வேற்றுமையாம்!

ஐரோப்பா சிவனின்நிறம்
ஆபிரிக்கா மாலின்நிறம்
ஐயோப்பா அகன்றபெரும்
ஆசியாவின் நிறம்என்னவோ?

இயற்கையெல்லாம் ஒரேவகையாய்
இருந்துவிட்டால் வாழ்க்கையிலே
செயற்கரிய செயல்களில்லை
சிந்தனைக்கு விருந்துமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து!

கடந்த 20-11-1993ல் ரொரன்ரோவில் ஆர்ப்பாட்டமில்லாமல் ஒரு இலக்கியவிழா அரங்கேற்றமானது. கனடாவிலுள்ள பெரும்பான்மை யான பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கியச் சுவைஞர் கள் கலந்துகொண்ட அந்த மணிவிழாவின் கதாநாயகன் கவிஞர். கந்தவனம் அவர்களாகும். ஆமாம் கவிஞர். கந்தவனம் அவர்களின் அறுபது வயதுப் பூர்த்தியையொட்டி நடைபெற்ற மணிவிழாவே நாம் இங்கு குறிப்பிடுவது.



இவரைக் கவிஞர் என்று பொதுவாக குறிப்பிட்டாலும் இவர் ஒரு பல்துறை விற்பனர். பேச்சு, எழுத்து, பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நாடகம் போன்ற பல்துறையிலும் கால் பதித்தவர். அதுமட்டுமன்றி வானொலியிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது. மரபுக்கவிதைமீது பற்றுக்கொண்டாலும், பல புதிய கருத்துக்களை மரபு வழியாக அறிமுகமாக்கும் புதிய சிந்தனையாளர். இவரது மணிவிழாவை இத்தனை சிறப்பாக நெறிப்படுத்தியவர்களில் திரு. எஸ். ஜெகதீசனும், திரு எஸ். திருச்செல்வம் முக்கியமானவர்கள். "ஒரு கலைஞன் வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும்." என்ற இவர்களது நோக்கம் உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.



மணிவிழா நினைவாக திரு எஸ். ஜெகதீசன் எழுதிய கவிஞரின் வாழ்க்கைவரலாறு "கவிநாயகர் கந்தவனம்" என்ற பெயரிலும் கனடாவிலுள்ள பதினொரு கவிஞர்களின் பாமாலையும் அகிலன் அசோசியேட் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. அறுபது வயதிலும் மாறாத இளமைத்தோற்றத்துடன் உலாவரும் கவிஞர் இன்னும் பல ஆண்டுகாலம் வாழ்ந்து இலக்கிய உலகிற்குச் சேவைசெய்ய வேண்டுமென்று "ரோஜா" வாழ்த்துகிறது.

தகவல்: நிலா குகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் தொண்டும் பற்றிய சிந்தனைகள்.


## செ.வேலாயுதபிள்ளை B.A.(Hons)

[முன்னை நாள் இலங்கைக் கல்விச்சேவை பிரதான கல்வி அதிகாரி]


- அக்டோபர் இதழின் தொடர்ச்சி -

1897 ஏப்பிரல் 15ஆம் திகதி சுவாமி நியூயோக்கிலிருந்து கப்பல் மூலம் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். லண்டனில் அவர் மீண்டும் சொற்பொழிவாற்றுவதையும், வகுப்பு நடாத்துவதையும் மேற்கொண்டார். இந்தமுறை ஒரு முக்கிய மான சம்பவம் நிகழ்ந்தது. பேர் பெற்ற கீழைத்தேய மொழிவல்லுனரான பேராசிரியர் மாக்ஸ் முல்லர் (MAX MULLER) சுவாமிக்கு விசேட அழைப்பு விடுத்து, அவரைத் தமது இல்லத்தில் வரவேற்றார். பேராசிரியர் சுவாமியை ஒக்ஸ்போட்டிலுள்ள பல கல்லூரிகளுக்கும், உலகப் புகழ்வாய்ந்த பொட்லியன் நூலகத்திற்கும் (Bodliean Library) அழைத்துச் சென்று காண்பித்தார். சுவாமி பேராசிரியரிடம் விடைபெற்றுப் புறப்பட்ட போது, "ஸ்ரீ ராமகிறுஷ்ண பரமஹம்சரின் சீடர் ஒருவரை ஒவ்வொருநாளும் சந்திப்பதில்லையே" என்று சொல்லி, அப்பேராசிரியர் புகைவண்டி நிலையம் வரை அவருடன் சென்று விடைகொடுத்தனுப்பினார். இம்முறை லண்டனிலும் சுவாமிக்குச் சீடர்கள் சேர்ந்தனர். இவர்களுள் "நிவேதித்த சகோதரி" (Sister Nivedita) எனும் பெயருடன் இந்தியாவிலே பணி செய்த செல்வி நோபிள் (Miss Noble) குறிப்பிடத்தக்கவர். செவியர் தம்பதி (Mr. and Mrs. Sevier) தாங்கள் வாழ்நாளில் எதிர்பார்த்திருந்த குரு சுவாமி விவேகானந்தரே என்றும், அவர் போதனையே தங்களுக்குப் பிடித்த தத்துவம் என்றும் போற்றிப் புகழ்ந்து தம்மையும், தமது பொருளையும் எல்லாம் சுவாமிக்கு அர்ப்பணம் செய்தனர். அவர்கள், ஓயாத உழைப்பால் சுவாமி இளைத்திருக்கிறார் என்று எண்ணி அவர் சிறிது ஓய்வெடுப்பதற்காக அவரை ஐரோப்பாவிற்கு அழைத்துச் சென்று, ஜெனீவா, சாமோனீ (Chamonix) போன்ற இடங்களில் மலைக்காட்சி போன்ற இயற்கைக் காட்சிகளைக் காட்டி, ஜேர்மனிக்கூடாகச் சுற்றி வந்து, லண்டனுக்கு மீண்டனர். லண்டனில் சுவாமி மீண்டும் தமது சொற்பொழிவு நிகழ்த்தல், வகுப்பு நடத்தல் பணியை இருமாதங்கள் தொடர்ந்து செய்து வந்தார். பின்னர் உடல்நலம் குன்றியமையால் இந்தியாவுக்கு மீண்டார். அமெரிக்காவிலே இருந்தபோது சுவாமி திட்டமிட்ட மாபெரும் மறுமலர்ச்சிப்பணி தாய்நாட்டில் காத்திருந்தது.

சுவாமி விவேகானந்தர் மேற்குலகில் தமது ஞான வெற்றிக்கொடியை நாட்டித் தாய்நாடு திரும்பிய நிகழ்ச்சி தற்கால இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்பத்தை உண்டாக்கியது. சுவாமியை வரவேற்று கௌரவிப்பதற்கு முழுநாடுமே ஐக்கியப்பட்டுத் திரண்டு நின்றது. இலங்கை முதல் இமயம் வரையும் இந்து மக்கள் சொல்லொணா திளைத்து தலைநிமிர்ந்து நின்றனர். மக்களின் இந்தப் புத்துயிர்ப்பைக்கண்ட சுவாமி, இந்து மக்களின் வாழ்விற் சமயமே உயிர் நிலையாயிருப்பதை உணர்ந்தார்; அரசியல், பொருளாதாரம், கைத்தொழில், வணிகம் போன்ற எனைய துறைகள் எல்லாம் சமயத்திற்குத் துணைச்சாதனங்களே. சுவாமி தமது பணியைத் தொடங்கினார். இலங்கை முதல் இமயம் வரையும் பற்பல இடங்களிலே இந்து சமயத்தின் பெருமையை விளக்கி, வேதாந்த கேசரியென முழங்கினார். உறங்கிக் கிடந்த தாய்நாட்டு மக்களைத் தட்டியெழுப்பி விழிக்கச் செய்தார். தேசப்பணியில் ஆர்வத்தையும், புத்துயிரையும் அவர்கட்கு ஊட்டினார்.

மேற்குலகம், விஞ்ஞானம், அரசியலமைப்பு முதலியதுறைகளில் மேம்பட்டிருந்தாலும், சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் இந்தியா எல்லா நாடுகளிலும் பார்க்க மேலோங்கி நிற்கின்றது. இந்தியாவில் தோன்றிய இருஷிக




* துவாரகாஸ் *

PRINCESS PLAZZA
1670 VICTORIA PARK AVE
TEL: (416) 757-1091




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும், முனிவர்களும் ஆன்மீகத்துறையில், மேற்கு நாட்டினர் ஏறத்துணியாத மிக உன்னத நிலையை எட்டியுள்ளனர். மேற்குநாட்டார் அரசியல் முறையில் இந்தியாவை அடிமைப்படுத்தினும், சமயத்துறையில் அடிப்படுத்த முடியாது.

மேலைநாடுகளிலிருந்து சிறப்பாக நான்கு அம்சங்களை இந்தியர் கற்றுக்கொள்ள வேண்டும்: (1) மேற்கு நாடுகள் தங்கள் பொதுமக்களின் நிலைமையில் மிக்க அக்கறை காட்டுகின்றனர். அந்தநாட்டுப் பொதுமக்களின் நிலையோடு இந்திய பொதுமக்களின் நிலையை ஒப்பிட்டால் எற்றத்தாழ்வு தெற்றெனத் தெரியும். சுவாமி எழுதிய கடிதங்களில் இச் செய்தி அடிக்கடி பேசப்படுகின்றது. (2) அமெரிக்கப் பெண்களின் சுதந்திரமும், உயர்ந்த கல்விப் பண்பாடும், சமூகத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையும் போற்றத்தக்கவை. இந்துக்கள் தங்கள் பெண்களின் நிலையை உயர்த்த வேண்டும். பெண்களுக்குப் பாடசாலைகளும், கல்லூரிகளும் அமைக்கப்பட வேண்டும்; மருத்துவசாலைகள் அமைக்கப்பட வேண்டும், ஆண்கள் அவர்களை மரியாதையாக நடத்த வேண்டும். (3) மேற்குலகில் நிறுவன அமைப்புக்களின் பலம் மெச்சத்தக்கது. இந்தியர் தொழிலாளர் சங்கம், மகளிர் சமிதி போன்ற நிறுவனங்களை அமைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மேற்கு நாட்டுச் சகோதரர்களை எட்டிப்பிடிக்க முடியாது. (4) அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளின் பொருளாதாரச் செழிப்பு போற்றத்தக்கது.

இந்தியர் தமது உயர்ந்த ஆன்மீகப் பண்பாட்டினை பேண வேண்டுமானால் அரசியற் சீர்திருத்தம், கல்வி, பொருளாதார வளம் ஆகியவற்றையும் பொருட்படுத்த வேண்டும். வலிமை வாய்ந்த தேசிய இனம் வேண்டும். மனிதன் பிறவியிலேயே பாவி என்று போதிக்கும் வலிமையற்ற சமயம் எமக்கு வேண்டாம். வேதாந்தம் வலிமையையே போதிக்கின்றது. அந்த வேதாந்த நற்செய்தியை ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் போதிக்க வேண்டும்.

இதுவே சுவாமி விவேகானந்தர் இலங்கையிலிருந்து இமயம் வரை பிரயாணம் செய்து பெருந்தொகையான மக்கட் கூட்டத்திற்கு ஆங்காங்கே நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சாரம். சுவாமியின் கொள்கைப்படி, இந்தியாவின் ஆன்மீகப் பண்பாட்டை அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய மேற்கு நாடுகளின் உலகியற் பண்பாட்டுடன் இணைந்த சமூகமே இலட்சிய சமூகமாகும். இந்த இரு பண்பாடுகளையும் இணைக்கும் நோக்கமாகவே அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தையும், வேதாந்த நிலையங்களையும் தோற்றுவித்து தம்முடைய இந்திய சீடர்களை இந்தியாவிலிருந்து வந்து தொண்டாட்டுவதற்கும் ஒழுங்குகள் செய்தார்.

மரபுமுறையான இந்தியத் துறவிகள் தமது தனிப்பட்ட ஈடேற்றத்துக்காகவே தனித்திருந்து தவம் செய்தும், தியானம் செய்தும் முத்திபெற முயன்றனர். மற்றவர்களையும் ஈடேற்றவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. ஆனால், சுவாமி விவேகானந்தரோ துறவிகள் தங்கள் ஒடுங்கிய மனப்பான்மையை விட்டு, துறவு இலட்சியத்தோடு, சமூகத்தொண்டு இலட்சியத்தையும் இணைக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். மடத்திலிருந்த அவரது சக சன்னியாசிகள் சிலருக்கு இது புரட்சிகரமான கருத்தாகப்பட்டது. இறுதியில் அந்நச் சன்னியாசிகள் விவேகானந்தரின் கருத்தை ஏற்றுக் கொண்டனர். 1897இல் இராமக்கிருஷ்ண மிஷன் அமைக்கப்பட்டது.

அப்போது சுவாமி ஓயாதவேலை காரணமாக இளைத்துவிட்டார். தான் மேலும்பல ஆண்டுகள் வாழமாட்டார் என்னும் ஒரு முன்னுணர்வு அவருக்கு உண்டானது. 1897 ஆகஸ்ட் 11இல், பாரேயில் சுவாமி அச்சுதானந்தருக்கு, தாம் இன்னும் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்வார் என்று சொன்னார். அது உண்மையாகவே ஒரு தீர்க்கதரிசன வாக்காக அமைந்துவிட்டது! தமது உடல் நலம் குன்றியிருந்த போதும் அவர் ஓயாது சேவையிலேயே ஈடுபட்டார். பஞ்சாப்பு, காஷ்மீரம், இராசபுத்தானம் ஆகிய பிரதேசங்களைச் சுற்றி வந்தார்.

அடுத்த ஆண்டு சுவாமி இமாலயப் பிரதேசங்களில் மிகவும் சிரமமான பிரயாணத்தை மேற்கொண்டார். மேற்கு இமாலயத்தில் 17,821 அடி உயரத்திலுள்ள அமர்நாத் சிவதலத்திற்கு யாத்திரிகர்களோடு ஒருவராகத் தாமும் சேர்ந்து சென்றார். சுவாமி மற்ற யாத்திரிகர் போலவே அமர்நாத் குகைக்குப் பக்கத்தில் ஓடும் கடுங்குளிரான அருவியில் முழுகி, அரைத்துணி ஒன்றைத்தவிர ஆடையொன்றும் அணியாமல் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார். சிவத்தின் முன்னிலையில் அறிவு நிலை கடந்த ஆன்மீக அனுபவம் ஒன்று அவருக்கு உண்டானது. அந்தத் தாக்கத்தின் விளைவாகச் சுவாமியின் இருதயம் நிரந்தரமாக விரிவடைந்து விட்டது. சுவாமியின் பக்தியில் சிவன் மிக அணுக்கமாயிருந்த தெய்வம். ஆதலால் அமர்நாத் குகையில் சிவத்தின் சன்னிதியிலே சுவாமி நெக்குருகி நின்றார். பின்னர் சில நாட்களாக அவர் சிவனைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்; வேறு எந்தவிதமான பேச்சும் இல்லை. பின்னர் ஒருநாள் சுவாமி தமது சீடர் ஒருவருடன் தமது அமர்நாத் யாத்திரை பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் "சிவபிரான் என் மூளையுட் புகுந்து விட்டார்; இனி அவர் போகார்" என்று கூறினார்.

1898 இல் பேலூருக்கு வந்தார். அவரது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இங்கே இராமக் கிருஷ்ண சங்கத்திற்கு ஒரு புதிய மடம் கட்டப்பட்டிருந்தது. டிசெம்பர் மாதம் நிகழ்ந்த அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சுவாமி தமது மெய்வருத்தத்தையும் பொருட்படுத்தாமற் கலந்து கொண்டார். 1899முதல் இராமக்கிருஷ்ண சங்கத்துக்குப் பேலூர் மடமே நிரந்தரமான தலைமைப்பீடமாக விளங்கியது. இவ்வாறு சுவாமியின் திட்டங்களுள் ஒன்று நிறைவேறியது. அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சுவாமி இவ்வாறு கூறினார். "பன்னிரெண்டு ஆண்டுகளாக நான் சுமந்து வந்த பொறுப்பின் சுமை இன்று இறங்கிவிட்டதாக உணர்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் சுவாமியின் மற்றொரு திட்டமும் நிறைவேறியது. இமய மலையிலே 6,800 அடி உயரத்திலே, அழகிய சூழலிலே அத்வைத ஆச்சிரமம் 1899 மார்ச்சில் நிறுவப்பட்டது. இதற்கான பொறுப்பை சுவாமி செவியர் தம்பதியிடமும், சுவாமி சுவருபானந்தரிடமும் ஒப்படைத்து விட்டார். இந்த இரு மடங்களும் செவ்வனம் இயங்குவதை உறுதி செய்து கொண்டு, சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையும் மேற்கு நாடுகளுக்குப் பிரயாணம் செய்ய விரும்பினார். சுவாமி துரியானந்தரும், நிவேதித்த சகோதரியும் விவேகானந்தருடன் சென்றனர். இப் பிரயாணம் 1899 யூலை மாதம் ஆரம்பித்தது. லண்டனில் இருவாரம் தங்கியபின் சுவாமி அமெரிக்கா சென்றார். அங்கே சுவாமி விவேகானந்தரும் பழைய நண்பர்களும் சுவாமியை வரவேற்றனர். சுவாமி அபேதானந்தருக்கு விவேகானந்தர் தமது மரணம் பற்றி மறைவாகக் குறிப்பிட்டார்.

இம்முறை கலிபோர்னியாவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரிலே விவேகானந்தர் பணிபுரிந்தார். இராஜ யோகம் பற்றி ஒரு சொற்பொழிவுத் தொடரை நிகழ்த்தியதோடு, வகுப்புக்களும் நடத்தினார். அமெரிக்காவில் ஓராண்டு மட்டுமே தங்கி, 1900 டிசெம்பரில் நாடு திரும்பினார்.

தாய்நாட்டிலே சுவாமி மீண்டும் கடமையில் ஈடுபட்டார். உடல் நிலையையும் பொறுட்படுத்தாமல் இடந்தோறும் சென்று சொற்பொழிவுகள் ஆற்றினார். மடத்து வேலைகளையும் கவனித்தார். மடத்து பிரமச்சாரிகளுக்கு வகுப்புகள் நடத்தினார். 1902 யூலை 4ஆம் தேதி கரும வீரர் விவேகானந்தர் திடீரெனப் பரமபதம் அடைந்தார்.

இளம் வயதிலே, அதாவது முப்பத்தொன்பதாம் வயதிலே சுவாமி இறந்த செய்தி நாட்டையே கலக்கி விட்டது! சிக்காக்கோ சர்வசமய ஆராய்ச்சிப் பேரவையிற் பேசி பத்து ஆண்டுகள் கழிவதற்குள், சுவாமி இந்தியாவை மேல் நாட்டார் நோக்கிலே உயர்த்தி விட்டார். அவர் இன்னும் நீடித்து வாழ்ந்திருந்தால் என்னென்ன சாதனைகளை நாட்டியிருப்பார்! பாரத நாட்டின் உயிர்ச்சக்தி கிளர்ந்தெழுந்து செயற்படுவதைக் கண்டு மகிழ்ந்த சுவாமி, தமது குருதேவரின் விருப்பத்தை நிறைவேற்றி, குருதேவர் கூறிய வாறே "எங்கிருந்து வந்தாரோ, அங்கே போய்விட்டார்."

சுவாமி விவேகானந்தரின் வாழ்விலே சாத்திர அறிவும், ஞானவீரமும், தாய்நாட்டுப் பற்றும், மக்கள் சேவையும் உருக்கொண்டு விளங்கின. அவர் கலைக் கடலுக்குள் மூழ்கி, வேதாந்தம் என்னும் சமரச பணியினைக் கண்டெடுத்தார்; சாதனைக் கடலுள் ஆழ்ந்து ஸ்ரீராகிருஷ்ணர் என்னும் கருமணியைக் கண்டறிந்தார்; உலக வாழ்க்கையில் அமுந்தி, மக்கள் சேவையெனும் மணியைக் கண்டார். இம் மும்மணிகளைக் கொண்டே அவர் பாரதத தாய்க்கு என்றும் மங்காமல் ஒளிரும் மணிமுடி சூட்டினார். உள்ளத்தே குருமணியின் ஒளியையும், உரையிலே வேதாந்த மணியின் ஒளியையும், செயலிலே சேவைமணியின் ஒளியையும் புகவிடுமாறு அவர் மக்கள் அனைவரையும் வேண்டினார். சுவாமியின் உள்ளம் உயர்வற உயர்ந்த ஞான நிலையிலே எப்போதும் ஒன்றியிருந்தது. அதனால் அவரது வாழ்வு ஆன்மீகசக்திக்கு ஒரு மடைபோல அமைந்தது; குருதேவரது சங்கப்பத்திற்கு ஒரு கருவியையும் அமைத்தது.

**"எழுமின்! விழிமின்! இலக்கை எய்துமுன் தரியன்மின்!"** என்ற விவேகானந்தரின் வீரமுழக்கம் என்றும் எமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கட்டும்.

★★★


**பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நல்வாழ்விற்காக**
**மறுமலர்ச்சி மாணவர்கள் வழங்கும்..................**

# "அஸ்டலக்ஷ்மி"
## கலண்டர்கள்

இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டு, இலங்கை, கனேடிய விடுமுறை தினங்களை உள்ளடக்கிய தினத்தாள் கலண்டர்..

அறிமுகப்படுத்துவோர்:- "மறுமலர்ச்சி மாணவர்கள்"

மேலதிக தொடர்புகளுக்கு:- தலைமை அலுவலகம் (416) 499-0039 / (613) 565-5608




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் கடிதம்

நண்பா
நீண்ட நாளிற்குப்பின்
கனடாவிலிருந்து
என் கடிதம்

தமிழீழம் முழுவதும்
புகைமண்டலம் என்றாய்
எதிரி எம்மண்மீது
பொழிந்த குண்டு மழையில்
என்றாய்

இங்கும் புகை
இளைஞர்களும்
யுவதிகளும்
இணைந்துவிடும்
சிகரட்புகை

நண்பா
ஈழத்துப் போரில்
ஆணும், பெண்ணும்
இணைந்து போராடுவதாக
நீ எழுதியிருந்தாய்

இங்கும் அப்படித்தான்
போராட அல்ல
சினிமா பார்க்க
சிகரட் புகைக்க
சிற்றின்பம் அனுபவிக்க

ஈழத்துப் போராளிகளுக்கு
இயக்கப் பெயர்
உண்டல்லவா
சங்கர் என்றால்
சத்திய நாதன்
சீலன் என்றால்
சாள்ஸ் அன்டனி
மாலதி என்றால் சகாயசீலி

அப்படி இங்கும் உண்டு
இயக்கப் பெயர் அல்ல
அவர்கள் இட்ட பெயர்
"குமுத்" என்றால்
குமுதினி
"கிறிஸ்" என்றால்
கிருஷ்ணபிள்ளை
"விக்" என்றால்
விக்னேஸ்வரன்
"ஆஷா" என்றால்
அபிராமி

உங்கு காதல்
கண்ணில் தொடங்கி
கடதாசியில்
முடியுமல்லவா
இங்கு
காரில் ஏறி
கட்டிலால் இறங்கும்

நண்பா
நீ எழுதினாய்
குண்டுகள் இட்டது
முத்தம்
குருதிகள் சொட்டுது
நித்தம்
கேட்டவில்லையா
உனக்கு என்
சத்தம்

இங்கும் குண்டுகள்
தமிழர்களை எதிர்த்து தமிழன்
தமிழனை எதிர்த்து கறுப்பன்
இங்கும் முத்தங்கள்
குண்டுகளின் முத்தமல்ல
இளம் கன்றுகளின் முத்தம்
பாடசாலைகளில் முத்தம்
பார்க்குகளில் முத்தம்
பாத்றூமில் முத்தம்
பலர் பார்த்துக் கொண்டு
இருக்கையில் முத்தம்

ஈழத்தில்
கலாச்சார அழிப்பு என்றால்
இங்கும் அழிப்புத்தான்
இங்குள்ள தமிழர்கள்
சுயானீஸ் என்று சொல்லி
சிரிப்பார்கள்
ஸ்பானீஸ் என்று சொல்லி
மகிழ்வார்கள் _ ஆனால்
மறந்தேனும் தமிழர்கள்
என்று விடாதே
மன்னிப்பே கிடையாது
உனக்கு.

**- கவிப் பிரியர்கள் -**
ரொரன்ரோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைக்கு ஒரு
காதலனை மாற்றுகின்ற
கிலிசகெட்ட வாழ்க்கை
பள்ளிக்கு சென்று
பாடம் படிப்பதற்குப்
பதிலாக
பள்ளியறைப்பாடம் படிக்கும்
அவல நிலை

கட்டிய கணவனை
வெளியிலும்
கட்டிளம் காளையை
கட்டிலிலும் போட்டு
கட்டிப்பிடிக்கின்ற
கெட்ட செயல்

நண்பா
ஈழத்தில் சீதனப் பிரச்சனை
இன்றும் உண்டென்றாய்
இங்குள்ள தமிழ் இளைஞர்கள்
வெள்ளைக்காரியை
மணம் முடிக்கலாம்
வெள்ளிக்காசு தேவையில்லை
கறுப்பியை முடிக்கலாம்
காசு பணம் தேவையில்லை
கயானீசை முடிக்கலாம்
சொந்த பந்தம்
சொத்துப்பத்து தேவையில்லை
ஆனால்
எம் தமிழ்ப்பெண்ணை
மணம் முடிப்பதென்றால்
சீர்வரிசை சீதனமாம்
சிலவெல்லாம்

பெண்வீட்டார் பார்க்கனுமாம்
பெண் - "பொன்"
நிறத்தில் வேண்டும் - கற்பில்
கண்ணகி போல்
வேண்டுமாம்


நண்பா
உன் பதிலில்
புலிப்படையில்
ஒரு கரும்புலிப்படை
உண்டென்றாய்
தனித் தற்கொலைப்படை
அதுவென்றாய்

உங்குமட்டுமா
தற்கொலை
இங்கும் தான்
காதலி கை
விட்டதால்
காதலன் தற்கொலை
கணவன் காசிற்காய்
பலரை ஏமாற்றியதால்
மனம் நொந்து
மனைவி தற்கொலை

இங்கு
ஓடும் ரெயிலில்
குதித்தோர் உண்டு
உயர்ந்த மாடியிலிருந்து
வெளியே பாய்ந்தோர்
உண்டு
பாசானங்களைப் பருகி
மடிந்தோர் உண்டு......

நண்பா
கனடா எப்படி
என்று கேட்டிருந்தாய்
கனடா
நல்ல வளநாடு
நாடி வருவோரை
நாளும் வாழவைக்கும் நாடு
சட்டம் நீதிகள்
நிறையக் கொண்ட நாடு
நிலப்பரப்பிலும்
நீண்ட பெரிய நாடு
பல்லின மக்களும்
சேர்ந்து வாழ
பல வழிகள் செய்த நாடு
கொடும் ராணுவ ஆட்சி
இங்கில்லை
கடும் குளிரின் ஆட்சியே
இங்குண்டு

நண்பா
தமிழனைத் தமிழன்
தமிழைத் தமிழன்
மதிக்காதவரை
அவன்
மிதிபடுவான்
அதுவரை
உன் துப்பாக்கிக் குண்டுகள்
எதிரி மீது
பாயட்டும்
என் பேனா
தமிழனை எதிர்ப்பவன்
உள்ளம் மீது
பாயட்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kumars SILK HOUSE

Tel/Fax:
(416) 465-7131

**1394 Gerrard Street. East, Toronto, Ontario. Canada**

**Available Items:**

- Wedding Coorai Sarees, Banaras, Kanjipuram, DharmaVaram, Pure Mysore Silk, Pure Kashmeer Silk, Japan Nylex, Sulwar Kummeezs, Singapore Nylex and all of Dress Materials.



- Pattu Vesty, Nool Vesty, Kibs, Sangu Mark Sarongs, Wedding Sets, Bharatha Natya Jewels and Gold Covering Ornaments.
- Original Indian Stainless Steel Utensils.
- Ready made Blouses - selection from over 1000 pieces.
- **Our New Services:** We do tailoring Saree Blouses, Under Skirts, Half Saree set, Sulwar Kummeezs, Kurtha, Pajama, etc.

**Open 7 days a week from 11.00 a.m. to 11.00 p.m.**

- உங்களுக்குத் தேவையான கல்யாண கூறைப்புடவைகள், பணாறஸ், காஞ்சிபுரம், தர்மாவரம், மைசூர் சில்க், காஸ்மீர் சில்க், ஜப்பான் நைலக்ஸ், மற்றும் சட்டைத் துணி வகைகள்
- உங்களுக்குத் தேவையான Audio, CD வகைகளுக்கும் நாடுங்கள்
- எமது ஸ்தாபனத்தில் நீங்கள் தெரிவு செய்யும் துணிகளில் உங்கள் விருப்பப்படி ஆடைகள் துரிதமாக தைத்துக் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Way Mart

- இலங்கை, இந்திய கனேடிய உணவுப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- வீடியோ, ஓடியோ, ஒலி, ஒளிப்பதிவுகள், நாடாக்கள்
- வீடியோப் பிரதி மாற்றம்



**NTSC ⟷ PAL**


- வீடியோ நாடா மாற்றம்

**8mm ⟶ VHS ⟵ BETTA**

- வீடியோ பிரதியிலுள்ள நிகழ்ச்சிகளை புகைப்படங்களாக மாற்றம் செய்தல் *(SONY Colour Printing)*
- சகல மொழிகளிலும் வீடியோ பெயர் பதிவுகள் *(Titling)*
- தமிழ், சிங்கள வீடியோ படப்பிரதிகள்
- சகல விதமான கடிகாரங்கள் (மொத்தமாகவும், சில்லறையாகவும்)
- மின்சார உபகரணங்கள்
- வாழ்த்து மடல்கள்

## Best Way Mart
## பெஸ்ட் வே மார்ட்

**2169 Victoria Park Ave** (South of 401)
**Scarborough, Ont.**
**(416) 444-8202**
**(416) 444-8913**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி மாற்றம் உங்கள் ராசிக்கு...

ரோஜா வாசக அன்பர்களே!

சனி மாற்றம் திருக்கணிதப் பஞ்சாங்கத்தின் படி மார்ச் மாதம் 3ம்திகதி 1993ஆம் ஆண்டு மாறிவிட்ட போதிலும் வாக்கியபஞ்சாங்கத்தின் படி ஸ்ரீமுக வருஷம் தைமாதம் 27ஆம் திகதி (10-02-1994) வெள்ளிக்கிழமை காலை 11-43 மணிக்கு (ரொரன்ரோ நேரத்தின் படி) அவிட்ட நட்சத்திரத்திலும் 3ஆம் பாதத்தில் மகர ராசியிலிருந்து கும்ப ராசிக்கு மாற்றம் அடைகிறான். ஜனவரி 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச்1 ஆம் திகதி வரை அஸ்தமனமாக இருப்பான்.




வாக்கிய பஞ்சாங்கம் நடைமுறையில் பரந்து பட்டுப் பாவனையில் இருப்பதால் வாசக அன்பர்களுக்கு சனி மாற்றத்தின் பலன்களை கீழே தருகின்றோம்.

சனியின் மூலம் நற்பலன், தீயபலன் ஆகிய இரண்டும் விளையக் கூடுமாகையால் சனியின் சஞ்சார காலத்தில் உங்களின் முழுமையான பலன்களை மற்றைய கிரகங்களின் சரியான நிலைகளையொட்டி அறிந்துகொள்ள வேண்டுமெனில் திறமையுள்ள சோதிட நிபுணர்களை அணுகுங்கள்.

## மேடம்

( அச்சுவினி, பரணி, கார்த்திகை, 1 ஆம் பாதம் வரை)

மேட ராசிக்கு 10 ஆம் இடத்திலிருந்து சனி 11 ஆம் இடத்திற்கு மாற்றம் அடைவதால் இந்தச் சனி மாற்ற காலத்தில் நீங்கள் பெற்ற ஒரு வரப்பிரசாதமாகக் கருதலாம். 11இல் சனி இருப்பது உங்கள் குடும்பவாழ்க்கையில் சில பிரச்சனைகளைக் கொடுத்தாலும் குருவின் பார்வை சனியின் செயலை நன்மையாக்கும். உங்களுக்கு நற்காலம் பிறந்து விட்டதால் நேரத்தை வீணாக்காமல் ஓய்வின்றி செயற்படுவீர்கள்.

குறிப்பாக மார்ச் மாதம் முதல் 31-08-94 வரை பல கோணங்களிலிருந்து பணவருவாய் உண்டாகும். உத்தியோகத்தில் உயர்வு, குடும்பத்தில் குதூகலம், பொருளாதார நிலையில் செழிப்பு ஏற்படுவதற்கு இது ஒரு நல்ல நேரம்.

வியாபாரிகளின் இலட்சியம் ஈடேறும். நிர்வாகத் துறையில் உள்ளவர்களுக்கு பிரச்சனைகள் தீர்வடையும், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். உடல் நிலையில் பாதிப்பு இருந்தாலும் நிவாரணம் பெற முடியும். வழக்கு விடயங்களில் மோசமாய்ப் போகின்றதே என்று எண்ண வேண்டாம். குருவின் பார்வை உள்ளதால் குருபகவான் கைகொடுத்து உதவுவான்.

01-09-94 தொடக்கம் 03-03-94 வரை சோதனை காலமாக அமையப் போகின்றது. நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலமாகும். ஆகையால் எந்தளவிற்கு விழிப்புணர்வுடன் செயற்படுவீர்களோ அந்தளவிற்கு தொல்லைகளிலிருந்து விடுபடுவீர்கள். கேது, ராகு, குரு ஆகியோருடைய பலவீனத்தால் கஸ்டங்கள் ஏற்படவே செய்யும்.

04-03-95 தொடக்கம் ஏப்பிரல் மாதம் 1996 வரையான காலகட்டத்தில் சில அவசரப் பிரச்சனைகள் உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்க முடியாமலிருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு அல்லது இடமாற்றம் இருக்கும்.

11ஆம் இடத்தில் வக்கிரம் அடைந்த சனி நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அகலும். டிசம்பர் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து குரு 9ஆம் இடத்திற்கு வருவதால் குழப்பமான சூழ்நிலைகள் நீங்கும்.

# இடபம்

( கார்த்திகை 2 ஆம் பாதம் முதல் ரோகினி, மிருகசீரிடம் 2 ஆம் பாதம் வரை )

உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்திலிருந்த சனி 10 ஆம் இடத்திற்கு வருகிறான். இச்சனி 9, 10 ஆம் வீடுகளுக்கு அதிபதி. அத்தோடு யோககருனனும் ஆவான். இதைவிட குரு 5 ஆம் பார்வையாகச் சனியைப் பார்ப்பதால் ஆரம்ப காலமே மிகவும் உற்சாகமாக இருக்கக் காணக்கூடியதாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். மே மாதம் 28 ஆம் திகதி ராகு 6 ஆம் இடத்திற்கு வருகிறான். எடுத்த கருமங்கள் முடிப்பதற்கும், அவ்வாறு முடிப்பதன் மூலம் வெற்றியைக் காணக்கூடியதாகவிருக்கும். வியாழ பலம் குறைவாக இருப்பதால் மிக நிதானத்தோடு கருமங்களை ஆற்றினால் வெற்றியடைய முடியும். சிலருக்கு மனை வாங்குவதற்கு வழி செய்யும். கொடுக்கல் வாங்கலில் வேகம் அதிகரித்திருக்கும். கொடுத்து வைத்த பணம் செலவிற்கு ஏற்றாற்போல் வந்து சேரும். வேலைவாய்ப்பு, திருமணம் போன்னவற்றிற்கு இக்காலம் ( 11-02-94 - 23-01-94 ) வெகு சிறப்பாக இருக்கிறது.

- தொடரும்

## சாதகம் பார்ப்பது எப்படி?...

இதன் தொடர்ச்சி மார்ச்/ஏப்பிரல் இதழில் தொடரும்....

ASTRO CENTRE
"வருமுன் காத்துக்கொள்"

சோதிடர் ஜெயா கந்தையாவை
நாடுங்கள்

இவரது கணிப்பில் சில...
மத்திய கிழக்குப் பிரச்சனையில் தீர்வு...
இலங்கைப் பிரச்னையிலும் அவரது தீர்க்க தரிசனம் உண்மையாகப் போகின்றது.

உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டுமா?

கைரேகை　கொம்பியூட்டர் கணிப்பில் சாதகம்　திருமணச்சேவை

597 Parliment St. Suite B-5, Toronto
Tel: (416) 324-9640　Fax: (416) 6968905



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விராட் விஸ்வப் பிரம்மனே நம)

# THAARANI JEWELLERY
# தாரணி ஜுவலறி

22 K

உங்கள் அனைத்து ஆபரணங்களையும்
சிறந்த கை வேலைப்பாடுகளுடன் செய்துகொள்ள

THAARANI JEWELLERY
Tel: (416) 289-6556
3630 Lawrence Av. E., Unit #03, Scarborough
(Markham & Lawrence)

✪ தகுதியான அச்சமைப்பு
✪ தரமான அச்சுவேலைகள்
✪ குறைந்த செலவு

நீங்கள் நாட வேண்டியது

# Quality
## PRINTING SERVICES

441 Esna Park Drive, Unit # 3, Markham, Ont. L3R 1H7
Tel: (905) 513-7575 ★★★★★★★★★★★★★★ Fax: (905) 513 0560

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமா...
## சினிமா...

டைரக்டராகப் போகும் கமலின்...

# ஆறு கோடி ரூபாய் கனவு...



'களத்தூர் கண்ணம்மா' படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான கமல், பல படங்களில் தனது தத்துருபமான நடிப்பினால் ஜமாச்சிருக்கிறார்.

சில குழந்தை நட்சத்திரங்கள் சில காலங்களுடன் மறைந்துவிடுகின்றன, சில குழந்தை நட்சத்திரங்கள் பெரிய நடிகராகவோ அல்லது நடிகையாகவோ பிரகாசிக்கின்றன.



படம்: சின்ன ஜமீன். கார்த்திக், சுகன்யா

கமல் என்ற இந்த குழந்தை நட்சத்திரம் இன்று தமிழ்நாட்டில் ஒருமுன்னணி நடிகராக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

'சகலகலா வல்லவனைப் பற்றி ஒரு நீண்ட பட்டியலையே போட்டுக் கொண்டு போகலாம். கமலிடம் இருக்கும் தன்னம்பிக்கையே அவரின் வளர்ச்சிக்கு அத்திவாரம். கமல் தன்னை ஒரு நடிகராக மட்டும் எண்ணாமல் எல்லாத்துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார். நடிகராக, பாடகராக இருந்த கமல் கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்புத் துறைகளில் ஈடுபட்டிருப்பது வெளிப்படை. ஆனால் எடிட்டிங், டைரக்ஷன் போன்ற துறைகளில் மறைவாகவே செயல்படுகிறார்.

சிவாஜிக்குப்பின் கமல் தான் "நடிகர் திலகம்" என்று சிவாஜியே பலதடவை சொல்லியிருக்கிறார். நடிப்பில் ஒரு "நாயகன்", நடனத்தில் ஒரு "சலங்கை ஒலி", மாறுபட்ட கரக்டருக்கு ஒரு "இந்திரன் சந்திரன்", கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பில் ஒரு "தேவர் மகன்", டைரக்டருக்கு ஒரு "மருதநாயகம்". ஆம்! கமல் டைரக்டராகப் போகும் "மருதநாயகம்", கமலின் 6 கோடி ரூபாய் கனவு... இப்படத்தை கமல் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒரே நேரத்தில் உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார். அவரின் இந்த முயற்சி வெற்றிபெற "ரோஜா" வாழ்த்துகின்றது.

- தரன் -

### முயன்றுபாருங்கள்!

இது கமல் நடித்த படம்?...

க_ _ _ _ டை

அக்டோபர் இதழின் பதில்.

கப்பலோட்டிய தமிழன்

# நான் ரசித்த காட்சி....

நான் சமீபத்தில் பாரதிராஜாவின் "கிழக்குச் சீமையிலே" படம் பார்த்தேன். சமீபத்தில் வெளிவந்த புதிய படங்களில் குடுப்பச்சித்திரங்கள் என்றோ, நல்ல கதையுள்ள படங்கள் என்று சொல்வதற்கு எதுமே இல்லை. ஆனால் பாரதிராஜாவின் "கிழக்குச் சீமையிலே" படத்தில் அண்ணன், தங்கை பாசத்தை வைத்து படமாக்கியிருக்கிறார். அண்ணன் சொல்லைத் தட்டாத தங்கை.

தங்கையின் வாழ்க்கை நல்லாயிருக்கவேண்டும் என்பதற்காக, தன் சொத்துக்களை எல்லாம் விட்டுக் கொடுக்கிறான் அண்ணன்.

தன் கணவன், தன் அண்ணனை தலை குனியவைக்க எடுத்த முயற்சிகள் அனைத்திலும் அண்ணன் தங்கை பாசம் தான் வென்றது என்று தன் கணவனுக்கு பதிலடி கொடுக்கும் ராதிகா நடித்த காட்சியே நான் கண்டு ரசித்த காட்சி....

- சியாமலா -
ஜேர்மனி

# 'நகைச்சுவை நாயகன்' வடிவேலு



வடிவேலு! தமிழ் திரைக்கு மதுரை தந்த சமீபத்திய சீதனம்!

ஏனைய காமெடி நடிகர்கள் திரையில் ஏதெனும் சேஷ்டைகள் செய்தால் மட்டுமே சிரிப்பலை கிளம்பும் ரசிகர்களிடமிருந்து. ஆனால் வடிவேலுவுக்குக் கிடைத்து வரும் வரவேற்பு வேறு ரகம். திரையில் இவர் முகம் சின்னதாகத் தெரிந்தாலே போதும்... அடுத்த கணம் கைதட்டல்களும், விசில் சத்தமும், அடக்கமுடியாத சிரிப்பலையும் காதுகளைக் காயப்படுத்துமளவிற்கு தியேட்டரை குலுங்க வைக்கிறது. 'கோகுலம்' தவிர எஞ்சிய அனைத்துப் படங்களிலும் வடிவேலுவின் காமெடி ராஜாங்கம் தனியாகவே நடந்திருக்கிறது. அதுதான் அவரின் விருப்பமும்.

நாமும் வாழ்த்துவோம். இந்த 'நகைச்சுவை நாயகன்' மேலும் வளர.....

இம் மாத இதழுக்கான சினிமா... சினிமா.. கேள்வி:

**கமலின் 100வது படம் எது?**

உங்கள் பதில்களை 02/10/1994க்கு முன் 'ரோஜா'வுக்கு கிடைக்கக் கூடியதாக ரோஜா கூப்பனுடன் அனுப்பிவையுங்கள்.

அக்டோபர் இதழின் சினிமா... சினிமா... பதில்:
படம்: **'பூக்கள் விடும் தூது'**
இயக்குனர்: **ஸ்ரீதர் ராஜன்.**
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:
**சுகந்தினி செந்தில்நாதன்**

6 குமார் ஸ்தாபனத்தினரால் $10 பெறுமதியான வவுச்சர் அனுப்பி வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கம்ப்யூட்டர் யுகத்திற்கேற்ப உங்களுக்கு ஓர் வழிகாட்டி!

# Ammaan Computer Informatik

## அம்மான் கம்பியூட்டர் இன்போமட்டிக்

## சுவிஸ்லாந்து

**பயிற்சிநெறி**

இலங்கையில் டிப்பிளோமா பட்டம் பெற்று, ஒரு வருடம் பயிற்சியாளராகவும், சுவிசில் இரண்டு வருடமாக புறோகிறாமராக பணியாற்றிவருபவரும், மற்றும் கம்பியூட்டர் Dataவில் பயிற்சி பெற்றவரும் பயற்சியாளராக பணிபுரிந்தவரும் இணைந்து நடாத்தும் கம்பியூட்டர் வகுப்புக்கள்:-

**புதிய வகுப்புக்கள்**

- dBase I I I Plus...
- dBase I V ...
- Lotus 123 for Windows...
- Wortstar 2000+
- Windows 3.1
- Microsoft Word --Ver 2b
- CorrelDraw ---Ver 4
- Pascal
- Microsoft Works
- Software & Hardware installation

ஆகியவற்றிற்கான பயிற்சி நெறிகளை பெற்றிட விரும்புபவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

Shankar (J.Programmer, Switzerland) - Sivapalan

**Tel: 031/992 04 83**

**With This Coupon 15% OFF**

**VANESSA'S CUTS**
**Unisex Hair Salon**
3630 Lawrence Ave. E Unit 2
Scarborough, Ont. M1G 1P6

*Tues. - Wed. 10 - 6*
*Thurs. - Fri. 10 - 8*
*Sat. 9:30 - 6*



ஸ்ரீ 439-6666

Appointment Not Necessary

அடுத்த இதழில்....

'தொடர்கதைகள்' 'கேள்வி பதில்' ஆரம்பிக்கப்படவுள்ளன... உங்கள் கேள்விகளை ரோஜாவுக்கு அனுப்பிவையுங்கள்.

**தைப்பொங்கல் சிறப்பிதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கும் பாம்பு அரக்கன்...

பவள நாட்டின் மகாராஜன் சேதுபதியின் மனதை ஒரு கவலை வாட்டிக் கொண்டிருந்தது. பவள நாட்டின் ஒரே வாரிசான இளவரசி பவளவள்ளியின் பிறப்பின் மர்மமும், அதனால் ஏற்படும் பின்விளைவுகளும் சேதுபதியின் நெஞ்சில் தீ மூட்டிக்கொண்டிருந்தது. தனக்கும் அரன்மனை சோதிடர் தேவவேந்தருக்கும் தெரிந்த பதினெட்டுக்கால வருட சாபம் சேதுபதியின் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக தூதுவனிடம் தளபதி சிம்மனை அழைத்துவர கட்டளையிட்டார். தளபதி வந்ததும் நாட்டின் எல்லா இடங்களிலும் கடுமையன காவல் இடும்படி கட்டளையிட்டார். சிம்மனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "அரசே திடீரெனப் பிறப்பிக்கும் இந்தக் காவலின் உள்ளெண்ணத்தை நான் அறியலாமா." "சிம்மா இன்னும் அமாவாசைக்கு ஐந்து மணி நேரம்தான் மிகுதியாக இருக்கிறது, அமாவாசை பிறந்து அடுத்த நிமிடத்தில் இந்த நாடே கதிகலங்கும் ஓர் ஆபத்து வரப்போகிறது." சிம்மன் திடுக்கிட்டான். "என்னது நாட்டிற்கு ஆபத்தா, அதுவும் ஐந்து மணிநேர அவகாசமா, எனக்கு ஒன்றுமே புரியவில்லை அரசே." "சிம்மா முதலில் எனது கட்டளையை நிறைவேற்று பின் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்கிறேன்." அடுத்த இரண்டு மணிநேரத்திற்குள் நாட்டின் எல்லா முனைகளிலும் காவலர்கள் கடமைக்காக பணிக்கப்பட்டனர். இன்னும் அந்தக் கொடூரம் நிகழ இரண்டு மணிநேரம்தான் உள்ளது. பரிகாரம் தேடிவர சென்ற சோதிடர் சேதுபதியை காணவில்லையென அரசர் தவித்துக்கொண்டிருந்தார். நாட்டு மக்கள் அனைவருக்கும் செய்தி பரவியது. ஏதோ ஆபத்து வரப் போகிறதென்று தெரியும், ஆனால் என்ன ஆபத்து என்பது யாருக்கும் தெரியாது.

இன்னும் இருக்கும் ஒரு மணி நேரத்திற்குள் தேவவேந்தர் வருவார் என்ற நம்பிக்கை அரசருக்கு கொஞ்சம் கூடயில்லை. என்னவாயிற்று என்று ஆராய்வதற்கு நேரம் போதாது. அவரஅவரமாக குலதெய்வம் குடியிருக்கும் அந்தப் பாதாள பைரவியின் குகைக்கு சென்றவர் அற்புதமான வீர வாளை பைரவியை வணங்கி கையில் எடுத்த அவருக்கு இனம் புரியாத வீரமும், மனதில் தைரியமும் பிறந்தது. வீரவாளை எடுத்துக்கொண்டு நேராக இளவரசியின் அறைக்குள் சென்றார். கையில் வீரவாளுடன் அரசரைக் கண்டதும் பவளவள்ளி திடுக்கிட்டு எழுந்து நின்ற இளவரசி விசயத்தைக் கேட்பதற்கு முன் அரசர் அந்த வீரவாளை இளவரசியின் கையில் கொடுத்தார்.

"மகளே உனக்கு அனைத்து வித்தைகளையும் கற்பித்ததற்கு காரணம் உனக்கு தெரியாது. உனது பலத்துடன் இந்த வீரவாளின் மகிமையையும் காட்டும் அந்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது."
"அப்பா எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதெல்லாம் என்ன வேடிக்கை."
"இது ஒன்றும் வேடிக்கையில்லை மகளே!... இன்னும் அரைமணி நேரத்தில் பிறக்கப் போகும் உனது 18வது வயதில் பாம்பரக்கன் உன்னை மணமுடித்து இந்த நாட்டையே அழிக்க வருகிறான்"
"அப்பா... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......."

- தொடரும் -

ரோஜாவின் போட்டிக்குரிய உங்கள் பதில்களுடன் இந்தக் கூப்பனையும் இணைத்து அனுப்புங்கள்.

Name :- ..................................................
Address :- ..................................................
..................................................
City :- .............................. Postal Code :- ..............................
Tele :- ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன் அன்னையை கவியால் வாழ்த்தும் அன்பு மகன்....

நீங்கள் அவதரித்த இன்நாள்
இறை குமரன் உதித்த நாள்
உலகெங்கும் சமாதானம்
உதித்த உயரிய நாள்

சத்தியமும் ஜீவனும்
நித்தியமாய்
வாழ்ந்திடும்
பொன்நாள்

ஆற்றலுடன் எம்மை
அறுசுவை உணவூட்டி
ஏற்றமுடன் வளர்த்திட்ட
எம் அருமை அன்னையே

பாராளும் வேந்தன்
அருள் பெற்று என்றும்
இன்பமாய் வாழ்கவென்று
வாழ்த்துகிறோம் உங்களை...

★★★



ராமாயணம் என்றால் எனக்கொரு விருப்பம்......
இருந்தாலும் எனக்கொரு சந்தேகம்........
ராமர் வில்லை வளைத்துத் தான் சீதையை
மணமுடித்தார் என்று ஒரு பகுதியில் கூறப்படுகிறது.......

அப்படி ராமர் அழகானவராக இருந்திருந்தால்.......

'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.....'
அடுத்து திருமணமல்லவா நடந்திருக்க வேண்டும்.......

**வில் வளைத்த பின்பு போட்டிக்காக...... நிற்பந்தத்தில்.....**
**நடந்த கல்யாணமா?...........**
**உண்மையில் ராமர் அழகானவரா?.......**

**- எஸ்.கே -**

ROJAH

F.P.P.O., P.O. Box 45593, 747 Don Mills Rd,
Don Mills, Ont. M3C 3S4, Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறிநுட்பம்

## PORINUDPAM

வாகனங்கள் திருத்தும் நிலையம்

Car Painting & Body Works


**பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்**

**வாகனங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல்** (Vehicle Inspected & Certified)

Computer **வசதியுடனான திருத்த வேலைகள்**

Alternator & Starting Motors Rebuilt **செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்தல்**

**இறக்குமதி செய்யப்பட்ட, உள்நாட்டு வாகனங்களின் விசேட நிபுணத்துவம்**




**435 BOWES RODE, UNIT 5**
**CONCORD, ONT. L4K 4A4**
**Tel: (416) 738-8360**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுளா பாஷன்

★ மங்கையர் தம் நெஞ்சையள்ளும் வகை வகையான புடவைகள், பஞ்சாபி உடைகள், நவநாகரீக ஆடைகள்

★ ஆண்களுக்கான சட்டைகள், பருத்தி, பட்டு வேட்டிகள்



★ சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய டிசைன்களில் 22கரட் தங்க நகைகள், ஆபரணங்கள்

★ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்கள்

5818 SHEPPARD AVE. EAST
SUITE# 203, SCARBOROUGH

Tel: (416) 297-9875/297-5872
(Spice Landக்கு முன்பாக)

---

# S.K.BALES DRIVING SCHOOL

- அரச அனுமதி பெற்ற சிறந்த சாரதிப் பயிற்சியாளர் (முன்னாள் ஸ்கந்தா ஆசிரியர்)
- முதற்தடவையில் எழுதுப் பரீட்சையில் (Written Test) சித்தியடைவதற்குரிய சுலபமான அதிவிசேட பயிற்சி வகுப்புக்கள்
- வாகனப் பயிற்சிக்கு: மணித்தியாலம் $19 மட்டுமே

**LEARNING AND DRIVING 265-3920**

---

# DEPANNEUR MAX SAUVE

9910 St. Laurant, Montreal, Que. H4N 3L9

***********************************

★ இலங்கை, இந்திய, கரேபியன், கனேடிய உணவுப்பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்

★ இலங்கை, இந்தியா, சிங்கபூர் ஆகிய நாடுகளுக்கு உடனுக்குடன் பணமாற்றம் செய்து கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய

**ஓரே ஸ்தாபனம்**

**டிப்பனர் மக்ஸ் சோவே**

Montreal <===> Toronto Moving செய்து தரப்படும்.
Tel: (514) 389-8093 or (416) 282-2257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## COMPUTER தகவல்கள்

### Upgrade 386 to 486

Micro Processor தயாரிப்பாளர்களான Cyrix ஸ்தாபனம் அண்மையில் தயாரித்து வெளியிட்டு உள்ள $Rx^2$ என்ற Micro Processor தற்போது பிரபல்யம் அடைந்து வருகின்றது. இந்த Processor இனை பாவிப்பதன் மூலம் 386 Computerகளை 486 ஆக இலகுவாக Upgrade செய்து கொள்ள முடியும். 386DX 16, 20, 25 அல்லது அதற்குமேல் உள்ள Processorகளை கொண்ட Computerகளை Cyrix $Cx486DRx^2$ Processorஇனை பாவிப்பதன் மூலம் 486 Computerஆக மாற்றலாம்.

### அதிவேக MODEM

CARDINAL Technologies அறிமுகப்படுத்தி இருக்கும் புதிய அதிவேக Modem. இது AT&T இனது V.32 Turbo வர்க்கத்தைச் சார்ந்தது. தற்போதைய, வேகமாக தரவுகளைப் பரிமாற்றக்கூடிய Modem 14,400bps என்பதை ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். CARDINALஇன் புதிய Modem, தற்போதைய Modemஇனை விட ஏறக்குறைய 30% இருதம் மேலான வேகம் கொண்டது. இது ஏறத்தாள 19,000bps - 20,000bps வரை வேகம் கொண்டதாக இருக்கும்.

*** Modem ஒன்றின் வேகம் இது பரிமாற்றம் செய்யும் Fileஇல் தங்கியுள்ளது. அதாவது Compress File பரிமாற்றத்தின் போது, குறைவாக இருக்கும்.

தகவல் S. மதி


# நிலா வீடியோ

(416) 472-6976

# NLA VIDEO

நி லா வி டி யோ

திருமணம்!

அது வாழ்வில் வசந்தத்தின் வரவு......
அந்த நினைவுகள் உங்கள் வாழ்வில்
பசுமரத்தாணியாகப் பதிக்கப் படவேண்டியவை......
உங்கள் எண்ணங்களை நாங்கள்
வண்ணத்தில் பதித்துத் தருகிறோம்!......
புதிய **தொலைக்காட்சிக் கமரா** மூலம்
அவற்றை அழியாத ஓவியமாக்குகிறோம்.

**VICTOR**
**(416)**
**472-6976**

"இளைய நிலா"
தயாரிப்பாளர்

★ அரங்கோற்றம், கலைவிழாக்கள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் தரமான முறையில் பதிவு செய்து தரப்படும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுளா பஷன்

5818 Sheppard Ave East, Unit # 203 (முதலாவது மாடி)

Sheppard & Gateforth Dr. (Markham Rd) சந்திப்புக்கு அருகாமையில்

**TEL : (416) 297 - 9875 / 297 - 5872**

ஓராண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ரொரன்ரோ மாநகரம் இதுவரை காணாத

நேரடியான

# மாபெரும் மலிவு விற்பனை

திங்கள் – வெள்ளி
காலை 11.00 – மாலை 9.00

சனி – ஞாயிறு
காலை 10.00 – மாலை 9.30

**"ஜனவரி 28 ம் திகதி தொடக்கம் பெப்ரவரி 6ம் திகதி வரை மட்டும்"**

**10,000 க்கு மேற்பட்ட வித்தியாசமான நவநாகரீக வடிவ அமைப்புக்கொண்ட பலவித வண்ணங்களில் சாறிகள் மலிவு விலையில்**

| | கடை முறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| பனாரிஸ் | 225- | 134.99 |
| காஞ்சிபுரம் பிளவ்வுஸ் துணியுடன் | 120- | 69.99 |
| 100 % தூய மைசூர் சில்க் | 140- | 79.99 |
| டைடெக்ஸ் சாறி பிளவ்வுஸ் துணியுடன் | 30- | 14.99 |
| அரை சாறி பொலியெஸ்ரர் பாவாடை (3 PCS) | 59- | 34.99 |
| நூல் வேட்டி | 15- | 8.99 |
| சாறி பிளவ்வுஸ் தைத்தது | 10- | 6.99 |
| வையிலிங் துணி | 3- | 1.99 |
| 2 x 2 பிளவ்வுஸ் துணி | 6- | 4.99 |
| சாரம் தைத்தது | 10- | 5.49 |
| மணவறை / மேசைக் கம்பளம் | 35- | 22.99 |
| சாறி வடிவ அமைப்புக் கொண்ட பஞ்சாபி | 100- | 68.99 |
| குர்தா செற் சில்க் (Men) | 60- | 27.99 |
| பட்டு வேட்டிக்குரிய சேட் | 20- | 12.99 |
| கனகாம்பரம் சரம் (Meter) | 2- | .49 |

**இன்னும் பல பல.....**

| | கடை முறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| USA Boys Suit 4 Pcs | 38- | 27.99 |
| USA Girls Dress | 38- | 27.99 |
| Dang Dang Men's Shirt | 20- | 12.99 |
| Dang Dang Boy's Shirt | 15- | 8.99 |
| Singapore Trouser | 30- | 17.99 |
| Skirt & Blouse | 35- | 24.99 |
| Blouse (Ladies) | 10- | 4.99 |
| Singapore Nighty | 13- | 7.99 |
| Ladies Denim Skirt | 19- | 13.99 |
| Children Dress | 20- | 9.99 |

**And Many More**

| எவர் சில்வர் பொருட்கள் | கடை முறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| நிறை குடம் செற் | 55- | 39.99 |
| இட்லி பானை – பெரியது | 38- | 27.99 |
| இட்லி குக்கர் – பெரியது | 40- | 29.99 |
| ஸ்ரீமர் – 3Pcs | 45- | 29.99 |
| புட்டுக் குடம் – பெரியது | 16- | 11.99 |
| புட்டுக் குடம் – சிறியது | 13- | 9.99 |
| சில்வர் பேணி தடித்தது | 1.79 | .99 |
| வாளி செற் – 8Pcs | 45- | 29.99 |
| கறித் தூக்குச் சட்டி | 20- | 14.99 |
| சாப்பாட்டு வட்டத் தட்டு | 7- | 4.99 |
| கறி சமைக்கும் சட்டி – 8Pcs | 50- | 34.99 |
| அப்பச் சட்டி | 25- | 14.99 |
| ஊதுபத்தி ஸ்ராண்ட் | 3- | .99 |

**50 வீத கழிவு**
**மலிவு விலையில்** ⇒ **கலைப்பொருட்கள், சோடினைப்பொருட்கள், ஆடம்பரப்பொருட்கள், இமிற்றேசன் நகைகள் சுவாமிப்படங்கள், விளையாட்டுப் பொருட்கள், இன்னும் பலவிதமான எண்ணிலடங்காப் பொருட்கள்.**

**SANYO**
**Rice Cooker**




## இலவச அதிர்ஸ்ட லாப லொத்தர்

இம்மலிவு விற்பனையின் போது $ 200ற்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்யும் அனைவரும் இதில் பங்கு பற்றும் தகுதி பெறுகின்றார்கள் 5ம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும் குலுக்கல் மூலம் 10 அதிர்ஸ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவரும் $ 50 பெறுமதியான வவுச்சரைப் பரிசாக பெறுவார்கள் இதன் பெறுமதிக்கு பொருட்களை மஞ்சுளா பஷனில் கொள்வனவு செய்யலாம். 6ம் திகதி வவுச்சர் வழங்கப்படும்

இவ்வவுச்சரின் பெறுமதியை காசாகப் பெறமுடியாது.

Quality printing services (905) 513-7575

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

## சந்திரனும் பறவைகளும்

**"கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா."**

பிதானபுரி என்ற ஊரில் சந்திரன் என்றொரு சிறுவன் வசித்து வந்தான். அவன் அப்பா மிகப் பெரிய பணக்காரராக யிருந்தார். சந்திரன் அவருக்கு ஒரே குழந்தை ஆதலால் அவன் ரொம்ப செல்வமாக வளர்ந்து வந்தான்.

அளவுக்கு மீறிச் செல்வமாக வளர்ந்து வந்ததால் சந்திரனுக்குக் கஷ்டம் என்றாலே என்னவென்று உணரவே வாய்ப்பு இருக்கவில்லை. ஆகவே அவன் சிறு வயதிலேயே இரக்கமில்லாத துஷ்டன் ஆகிவிட்டான். அதிலும் முக்கியமாக மிருகங்களையும் பறவைகளையும், கல்லாலும் வில்லாலும் அடித்துத் துன்புறுத்தி வந்தான்.

அவனால் அடிபட்டு அவைகள் துடிப்பதைப் பார்ப்பதில் அவனுக்கு ஏனோ மகிழ்ச்சி உண்டாகியது.
சந்திரன் பங்களாவின் அருகிலேயே ஏழை ஜனங்களின் சேரி இருந்து வந்தது. சேரி ஜனங்கள் வளர்த்து வந்த கோழிகள் சில சமயம் சந்திரன் வீட்டுத் தாழ்வாரத்திற்குப் பறந்தோ, நடந்தோ வந்துவிடும். சந்திரன் சும்மாயிருப்பானா? உடனே அவனுக்குக் கோபம் பொங்கி வந்துவிடும். கண்ணால் கண்ட சாமானால் அவைகளை ஈவு இரக்கமின்றி நன்றாக அடித்து விடுவான் பாவம்! இப்படி சந்திரனால் அவதிக்குள்ளாகி துடித்த கோழிகளுக்குக் கணக்கே இல்லை.

அதேபோல் வீட்டத் தாழ்வாரத்தில் வெய்யிலில் சந்திரனின் தாயார் அப்பளம், வற்றல், வடாம் என்று ஏதாவது உலர்த்தி வைத்திருப்பாள். அவைகளைக் கொத்தித் தின்ன வரும் காக்கை களையும் விட்டு வைக்கமாட்டான் சந்திரன். குறிபார்த்து கல்லாலோ, உண்டவில்லாலோ அடிப்பான். சிலசமயம் அவன் குறிதப்பாமல் அந்தக் காக்கைகள் மீது பட்டு அவைகள் துடிப்பதும் உண்டு. ஆனால் அதைக் கண்டு சந்திரன் இரக்கப்படமாட்டான். நன்றாக வேண்டுமென்று தனக்குத்தானே கூறிக்கொண்டு மகிழ்ச்சியே கொள்வான்.

ஒருநாள் சந்திரன் தன் நண்பர்களுடன் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவன் தலையில் மற்றொரு பையன் வீசிய கிரிக்கெட் பந்து எக்கச் சக்கமாகப் பலமாக விழுந்து விடவே, அவன் தலை சுற்றி மயக்கமாகக் கீழே விழுந்து விட்டான். பாவம்! அவன் விழுந்த இடம் கல் தரையாக வேறு இருந்ததால் உடம்பில் வேறு பல பாகங்களில் ஒரே காயம் பட்டு ரணமாகி விட்டது.

பலத்த காயங்களுக்கு இலக்கானதால் சந்திரனுக்கு ஆஸ்பத்திரியில் பல நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியது. அவனதுகாயங்கள் லேசில் ஆறாததால் அவன் மிகவும் அவதிக்குள்ளானான் தினந்தோறும் டாக்டர் வந்து அவனுக்கு ஊசிபோட்டு வந்ததோடு எரிகிற மருந்தைக் காயங்களில் தடவி கட்டுக் கட்டும் போது வலி தாளாமல் கதறி அழுவான் சந்திரன்.

தன் உடம்பில் ஏற்பட்ட புண்ணின் காரணமாக சந்திரனுக்கு நல்ல புத்தி வந்தது. உடனே அவனுக்கு, தான் அதுகாறும் கோழிகளையும், காக்கைகளையும் கல்லாலும், உண்டவில்லாலும் அடித்துத் துன்புறுத்தியதை நினைத்தபோது வருத்தம் மேலிட்டு அழுகை, அழுகையாக வந்தது. காயங்களெல்லாம் ஆறி சந்திரன் எழுந்து நடமாட ஆரம்பித்ததும் அவன் குணமே மாறிவிட்டிருந்தது. அவன் துஷ்டத்தனமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோய் விட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதெல்லாம் சந்திரன் கோழிகளையும், காக்கைகளையும், ஏன் எந்த ஜீவனையுமே துன்புறுத்துவதேயில்லை. மாறாக அவைகள் மீது அன்பும் இரக்கமும் காட்டி அவைகளுக்குத் தானியங்களை இறைத்து வருகிறான். தான் அன்புடன் இறைக்கும் தானியங்களைப் பறவைகள் சந்தோஷத்தோடு கொத்தித் தின்பதைக் கண்டு சந்திரன் அளவிலா மகிழ்ச்சி கொள்கிறான். அது மட்டுமின்றி அவைகளைத் தன் விளையாட்டுத் தோழர்களாகப் பாவித்து அன்புடன் அவைகளுடன் விளையாடியும் வருகிறான்.

குழந்தைகளே! தனக்குக் கஷ்டம் வந்த பின்பே பிறர் கஷ்டத்தை உணர்ந்து திருந்திய சந்திரனைப் பார்த்தீர்களா? நீங்கள் அப்படித் திருந்துவதற்கு நினைக்காமல் இப்பொழுது முதற் கொண்டே கோழி, காக்கை போன்ற வாயில்லா ஜீவன்களைத் துன்புறுத்தாமல் அன்புடன் இரக்கங்காட்டி ஆதரித்து வாருங்கள். அவைகளையும் கூட்டிக் கொண்டு விளையாடிப் பாருங்கள். அந்த விளையாட்டில் நீங்கள் நிச்சயம் இன்பம் காண்பீர்கள்.

பேட்டி

# "போட்டியிருந்தால் தான் முன்னேற முடியும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது....."

திருமலை தந்த "மெல்லிசைத் தென்றல்" என வர்ணிக்கப்படும் M. P. கோணேசின் இசைப்பயணம் ஏறக்குறைய 26 வருடங்களையும் தாண்டி மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. ஈழத்தில் முடிசூடா மன்னன் என தனக்கொரு இடத்தைப் பிடித்துக் கொண்டு, முதன் முதலில் தமிழ் இசைத் தட்டினை வெளியிட்ட பெருமையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இசையமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டு 250 பாடல்வரை தந்து இசைப்பிரியர் களின் நெஞ்சின் ஓரத்தில் நிலையான இடத்தைப் பிடித்து, கனடாவிலும் மணம் சேர்க்கும் "இசைத்தென்றல்" கோணேஸிடம் பேட்டி காணலாம் என சென்றிருந்த போது; அவர் தனது இசைக் கலைஞர்களுடன் புதிய பாடல் ஒன்றை பயிற்சி செய்துகொண்டிருந்தார்.

ஏனோ எனக்கொரு எண்ணம்......, கோணேஸ் "ரோஜா"வுக்காக பேட்டி தர நேரத்தை ஒதுக்குவாரா? என; காரணம் நான் வருவதாக முன்கூட்டயே அறிவிக்கவில்லை. திடீரென சந்தித்தால் பேட்டி ஒரு வித்தியாசமாக அமையும் என நினைத்துக் கொண்டு அந்த கலைக்கூடத்திற்குள் நுழைந்தேன். அங்கே எம். பி கோணேஸ் "ஓகன்" (Organ) வாத்திய கருவியருகே நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்டவுடன் என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். கோணேஸ் சற்றுக் கூட வெறுப்பைக் காட்டாமல் "ரோஜா" வுக்காக நேரத்தை ஒதுக்கி பேட்டி தர சம்மதித்தார். நானும் பேட்டியை இப்படியே......




**வணக்கம் கோணேஸ் அவர்களே!**
வணக்கம்.

**இசையில் 25 வருடங்களைக் கடந்து நிற்கும் உங்கள் வாழ்வின் வெற்றிப்படிகளை கொஞ்சம் சொல்லுங்களேன்....**

1971 ஆம் ஆண்டு முதன் முதலாக தமிழ் இசைத் தட்டினை நாம் வெளியிட்டோம். அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 15 இசைத்தட்டுக்களும் தமிழ், சிங்கள மொழிகளில் வெளிவந்தன. பிறகு ஜேர்மனியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கலாச்சாரக் குழு வுடன் இணைந்து 30 இசை நிகழ்ச்சிகளை மிகவும் வெற்றிகரமாக நடாத்தினோம் இப்போது கனடா விலும் மக்களின் நெஞ்சினைத் தொடுவதன் நோக் கமாகவே எனது இசைப் பயணத்தைத் தொடர் கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இங்கு குறுகிய காலத்திற்குள் இசை நிகழ்ச்சிகளையும், வானொலி நிகழ்ச்சிகளையும் நடாத்தி முன்னேறிக்கொண்டு இருக்கிறீர்கள். இங்கு பல இசைக் குழுக்களும், வானொலி நிகழ்ச்சிகளும் வளர்ந்து வருகின்றன. உங்கள் முன்னேற்றத்திற்கு இவைகள் போட்டியாக இருந்தது தான் காரணமா?**

போட்டியிருந்தால் தான் வளர முடியும், என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. கீரைக்கடைக்கு எதிர்க்கடை இருந்தால் தான்........ மற்றவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அன்று இலங்கையில் நாம் இசைத்தட்டை வெளியிடும் போது எமக்குப் போட்டியென்று இருக்கவில்லை. அதே போல் ஜேர்மனியில் நாம் இசை நிகழ்ச்சிகளை நடாத்தும் போதும் போட்டியென்று இருக்கவில்லை. கனடாவிலும் மற்றவர்களின் முன்னேற்றம் என்னையோ, எனது முன்னேற்றம் அவர்களையோ பாதிக்கும் என்று சொல்லமுடியாது. இங்கு மற்றவர்களைப் போல் அல்லாது 24 மணிநேரம் இசைக்காகவே என்னை அர்ப்பணித்து, தனிப்பாதையில் போய்க்கொண்டிருக்கிறேன்.

**M.P.K கலையகத்தில் பல இசைக்கலைஞர்களை பயிற்றுவித்து உருவாக்குகிறீர்கள், இவர்கள் பிரிந்துசென்றால் அது உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா?**

பாதிப்பை ஏற்படுத்தும் என்று சொல்ல முடியாது. M.P.K கலையகத்தின் நோக்கம் கலைஞர்களை வளர்ப்பதுதான். அவர்கள் தனி இசைக்குழுவை வளர்ப்பதாலோ, அல்லது வேறு இசைக்குழுவுடன் இணைவதாலோ எம்மைப் பாதிக்கும் என்று சொல்லமுடியாது. மற்றது M.P.K கலையகத்தினால் வளர்க்கப்பட்ட கலைஞர்களில் ஒரு சிலரை தவிர எல்லோரும் எமக்கு நன்றியாகத்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் ஒரு கோட்டைப்போட்டால் நாம் அதைவிடப் பெரிய கோடாகப்போட எண்ணுவோமே தவிர அவர்களின் கோட்டை அழிக்க நினைக்க மாட்டோம்.

**கடைசியாக நடந்த உங்களது இசை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்தன. ஏன் உங்களது நிகழ்ச்சிகளில் சினிமா பாடல்களை மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சொந்த இசையமைப்பில் புதிய பாடல்களை ஏன் பாட முடியாது?**

இலங்கையில் நாம் இசையமைத்த பாடலைத்தான் நாம் பாடினோம். அதுபோல ஜேர்மனியிலும் முழுக்க முழுக்க நாம் இசையமைத்த பாடலைத்தான் பாடி வந்தோம். கனடாவைப் பொறுத்த மட்டில் புதிய பாடல்களை உருவாக்கி கசெட்டுகளில் வெளியிட்ட பின்புதான் மேடையில் பாட முடியும். கடந்த மூன்று வருடங்களாக பொருளாதாரப், பிரச்சனைகளும்..... வேறு சில பிரச்சனைகள் எமக்கு முட்டுக் கட்டையாக இருந்தன. இப்போது நாம் இதற்கான முயற்சியை எடுத்து வருகின்றோம். அதைவிட இங்குள்ள கலைஞர்களும், பாடகர்களும் சினிமாப் பாடல்களையே பாட விரும்புகிறார்கள். சொந்தமாகப் பாடிய பாடல்களைக் கொடுத்தால் பின்னடிக்கிறார்கள். இது அவர்களின் அறியாமை என்பது எனது கருத்து. வெகு விரைவில் அவர்களே கேட்டுப் பாட முன்வருவார்கள் என நம்புகிறேன். அதற்கான முயற்சிகளைத்தான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

**இறுதியாக ஒரு கேள்வி. இந்தியக் கலைஞர்களை இங்கு அழைத்து நிகழ்ச்சிகள் நடாத்துவது பற்றி உங்களது கருத்து?....**

எனது கருத்து.........

கடந்த காலத்தில் ஈழத்து கலைஞர்கள் நடாத்திய நிகழ்ச்சிகள் மிகவும் வெற்றியடைந்துள்ளது. இந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நட்டமடைந்தும் இருக்கிறது. இந்திய கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சி நடாத்தத் தேவையில்லை என்பது தவறு. எம்மை உயர்த்திக் கொண்டால், எமது நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்திக் கொண்டால் இந்தயக் கலைஞர்களை அழைக்க வேண்டியதில்லை.

**உங்களுடைய நேரத்தையும் பொருட்படுத்தாது இந்த சந்திப்பிற்கு உதவிய உங்களுக்கு "ரோஜா"வின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் M.P.K கலையகம் மென்மேலும் வளர எமது வாழ்த்துக்கள், நன்றி.**

நன்றி. இந்த "ரோஜா" மலர் என்றும் வாசனைவீச எனது சார்பாகவும், M.P.K கலையகத்து சார்பாகவும் வாழ்த்துகிறேன்.

இங்கு கோணேஸ் குறிப்பிட்டார், இங்குள்ள பாடகர்கள் சொந்தமாக எழுதிய பாடல்களை கொடுத்தால் பாட பின்னடிக்கிறார்கள் என்று. ஒரு இசையமைப்பாளர் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் பாடலை பாடுவது ஒரு பாடகனின் அல்லது பாடகியினதோ கடமை. ஒரு சினிமாப் பாடலைப் பாடி பெயரெடுப்பதைவிட, சொந்தமாக ஒரு பாடலைப் பாடும் போது ஒரு பாடலுக்கு உயிர் கொடுத்த பெருமை இசையமைப்பாளருக்கும், பாடகர்களுக்கும் வந்து சேருகின்றது. வெகு விரைவில் இந்த முயற்சியை கோணேஸ் எடுப்பார் என்று "ரோஜா" நம்புகிறது.

- தரன் -

721 BLOOR ST
SUITE 1A
TORONTO

Sri Siva Jewellery
ஸ்ரீ சிவா ஜுவலறி

(416)
531-4867




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறுகள் பின்னோக்கிப் பாய்கின்றன.....

- சிவசாந்தினி -

என்னால் இன்னமும் நம்பமுடியவில்லை....... ஆனால் தேவகி அதைச் சொல்லிய விதம் அதை நம்பியே ஆகவேண்டும் போலிருந்தது.... பாவம் அவள்! இத்தனை சிறிய வயதிற்குள் எத்தனை கஸ்டங்கள்.... அவளது உறுதி என்னை ஒருகணம் திகைக்கவைத்தது.... அவள் எடுத்த முடிவு சாத்தியமானதா? அப்படி இருக்க முடியுமா?..... எனக்குள்ளேயே ஒரு பிரமிப்பு... இந்தத் தலைமுறை நுட்பமாகச் சிந்திப்பது மட்டுமல்ல, முடிவுகளைக்கூட புதியகோணத்திலே துணிச்சலாக எடுக்கிறது.




இத்தனைக்கும் தேவகியை எனக்குச் சுமார் ஒன்றரை வருடங்களாகத் தான் தெரியும். நான் ஆங்கிலம் படிக்கவென்று போய்ச்சேர்ந்த வகுப்பில் அவளும் இருந்தாள். முதல் நாளைய அறிமுகத்திலேயே அவளை எனக்குப் பிடித்துக் கொண்டது. சிலரைப் பார்த்த போதே பிடித்துக் கொள்ளுமல்லவா? அவளும் அந்த ரகம். என்னைப் போலவே அவளுக்கும் என்னைப் பிடித்துக் கொண்டது. முதல் நாள் பஸ் பிடித்து "ஸ்காபுரோ சென்ரர்" வரை ஒன்றாகவே வந்தோம். அதற்கிடையிலேயே என்னைப்பற்றி அவளும், அவளைப்பற்றி நானும் அறிந்து கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அவளிடம் பிடித்தது அந்த அடக்கமான சுபாவம் மட்டுமல்ல; அவள் ஒரு பட்டதாரியாக இருந்தும் எந்த விதமான பகட்டுமில்லை. வெறும் மூன்று "மார்க்குகள்" குறைந்ததால் பல்கலைக்கழகம் செல்லமுடியாமல் போன வன் நான். என்னோடு படித்த நளினி பல்கலைக்கழகம் கிடைத்தபின் அடித்த கொட்டம் எனக்குப் பல்கலைக்கழ கத்தின் மீதே ஒரு வெறுப்பை உண்டாக்கியிருந்தது. அதன் காரணமாக யார் பட்டதாரியென்றாலும் என்னை அறியாமலேயே ஒரு வெறுப்பு. ஆனால் தேவகி அதில் மாறுபட்டு நின்றாள். அந்த நான்கு மாதங்களுள் நான் தேவகிக்கும், தேவகி எனக்கும் மிகமிக நெருக்கமாகி விட்டோம்.

எதிலுமே ஒரு அடக்கமும், நிதானமும் அவளது தனித் தன்மை. முதன் முதலாக அவள் என் மகனின் பிறந்தா ளுக்குத்தான் வீட்டிற்கு வந்தாள். என் கணவருக்கு அவ ளை அறிமுகம் செய்து வைத்தேன். அவர் சிரித்தபடியே சொன்னார் "உங்களை நேரில் காணாவிட்டாலும் தினமும் என் மனைவி மூலம் தெரியும்"... உண்மைதான்! நான் தினமும் தேவகி பற்றிக் கதைக்குமளவிற்கு அவள் எனக் கு நெருங்கிய தோழியாகிவிட்டாள். ஏய்! எங்க உன்ட புருஷன்? இண்டைக்குக் கட்டாயம் கூட்டிவாரனெண்டு சொன்னாய் தானே?.

நான் கேட்டேன், மெல்லச் சிரித்தபடி "இன்னமும் அதுக்கு நாள் வரேல்ல, பாப்பம் எப்ப அவரை உனக்கு அறிமுகம் செய்யப் போறனோ தெரியாது". இதை அவள் சொன்ன போது அவள் கண்கள் கலங்கியது போல் ஒரு பிரமை. எனக்கு அது குழப்பத்தை உண்டுபண்ணினாலும் நான் பிறந்தநாள் மும்முரத்தில் மறந்து போனேன். மறுநாள் பள்ளிக்கூடத்தில் Brake நேரத்தின்போதுதான் நான் கேட் டேன்...

"தேவ்!...... (அப்படித்தான் நான் அவளைக் கூப்பிடுவேன்) அதுசரி; எங்க உன்ர புருசன்....... அப்படியென்ன...... எப்ப பாத்தாலும் வேலையோ?... நான் உன்னைச் சந்திச்சு கிட் டத்தட்ட ஆறுமாதமாகுது.... ஒருநாளாவது காணெல்ல!... அப்பிடியென்னதான் வேலை செய்யிறார்?..."

அடுக்கடுக்கான எனது கேள்விகளைக் கேட்டு அவள் எங்கோ பார்ப்பது போல் முகத்தைத் திருப்பிக்கொண் டாள். நான் விடவில்லை... மெல்லப் பிடித்துத் திருப்பி னேன்... அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது... நான் ஒரு கணம் அதிர்ந்தாலும், மெல்ல என்னைச் சுதாகரித்தபடி ".... ஏனம்மா!... ஏன் அழுறாய்?..."

நான் கேட்டவிதமே அவளுக்குத் தனது சோகத்தை அதி கரித் திருக்க வேண்டுமென நினைக்கிறேன்..... மெல்ல எனது கையைப் பிடித்தபடி விம்மினாள்.... என்னையறியா மலே என் கண்கள் கலங்கின...

★★★★★

தேவகி தனது பல்கலைக்கழகத்தை முடித்துவிட்டு ஆசிரி யையாகத் தனது புதியவாழ்க்கையை ஆரம்பித்து மூன்று வருடங்களின் பின்தான் அது நடந்தது.... பாடசாலை விடு முறைக்கு யாழ்ப்பாணத்திற்குப் போனபோது மாமாதான் அந்தச் சம்பந்தம் பேசிவந்தார். மாப்பிள்ளை கனடாவால் வந்து நிற்கிறாராம்..... பெண்படித்திருக்க வேண்டுமாம்..... சீதனம் அதிகம் தேவையில்லையாம்... பெண் பிடித்திருந் தால் உடனே பதிவுத் திருமணம் செய்வதுடன் உடனே கூட்டிக்கொண்டு போவாராம்....

அக்காவின் திருமணம் முடிந்து ஒருவருடம் ஆகிவிட்டதா லும், அவளுக்குக் கீழுள்ள தம்பிமார், தங்கைக்கு ஒரு நல்ல வழி கிடைக்குமென்ற ஆசையாலும் அவளது பதி வுத்திருமணம் அடுத்தவாரமே நடந்தது. அவள் எதிர்பார்த் ததைவிட மாப்பிள்ளை அழகாயும், நல்லவராயும் இருந் தார்... அந்த நாட்கள் வாழ்வின் வசந்த காலங்கள்....

இரண்டு மாதங்கள் அவனோடு சிங்கப்பூரில் இருந்த நாட் கள் என்ன இனிமையானவை....... அவளது கணவனை நம்பி இன்னமும் சிலர் அங்கே நின்றனர்....... "உம்மை முதல் அனுப்பிப்போட்டுப் பிறகு நான் இஞ்ச நிண்டு மற்ற ஆக்களையும் அனுப்பிப்போட்டு வாறன்..... நான் வந்த உடன கலியாணம்...."

இப்படித்தான் அவன் சொல்லி அவளை அனுப்பிவைத் தான்...... வந்து இறங்கியதும் அவன் சொல்லி அரசின் உதவியும் பெற்றாள். சுந்தரத்தின், (அதுதான் அவள் கண வன்) அக்காவும், அத்தான் பிள்ளைகளும் கனடாவில் இருந்தனர். அவர்களுடன் தேவகியின் கனடா வாழ்க்கை ஆரம்பமானது.

ஆரம்பத்தில் கனடா பிடித்திருந்தாலும் போகப்போக அவ ளுக்குத் தனிமை கசந்தது. ஒவ்வொரு தடவையும் போனில் பேசும் போது சுந்தரம் அடுத்தவாரம் வருவதா கக் கூறுவதும் பின்னர் "இஞ்ட கொஞ்சம் இமிக்கிறேசன் பிரச்சனை...... எப்பிடியும் இஞ்சயுள்ள மூன்று பேரையும் அனுப்பிப் போட்டு வாறன்......" என்று சொல்லுவதும் வழ மையானது. தேவகியின் பொழுதுகள் சுந்தரத்தின் அக்கா வின் பிள்ளைகளுடன் ஓரளவு கவலை மறந்து கழிந்து கொண்டிருந்தது.

இறுதியாக மூன்று மாதங்களின் பின்னர் ஒருவாறு சுந்- தரம் வந்து சேர்ந்தான். மறுமாதமே கல்யாணம் மிகத் தடல்புடலாக நடந்து முடிந்தது.... "என்னப்பா! இனிமேல் ஏஜென்சி வேலையேவேணாம், பேசாமல் ஒரு சின்ன வேலையொன்டு எடுத்துக்கொண்டு நிம்மதியா இருக்க லாம்" தேவகி சொன்ன போது அவன் மௌனமாக இருந் து விட்டு மறுநாள் சொன்னான் "விசர்கதை கதைக்கிறீர்! ஏற்கனவே ஆள அனுப்புவதெண்டு சொல்லிக் காசு வாங் கிற்றன். அந்த நாலு பேரையும் அனுப்பிப்போட்டுப் பாப்பம்....

தேவகி தன்பக்க நியாயத்துக்காக அவனது அக்காவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாள்... அக்கா சொன்னபோதும் சுந்தரம் கேட்காமல் தனது முடிவில் உறுதியாய் நின்றான்.... இருவாரங்களின் பின் மீண்டும் பயணம்..... தேவகி தனிமையில்..... அதன் பின்தான் தேவகி ஆங்கிலம் படிக்கவென்று வந்தாள்...... சுந்தரம் போய் இன்றுடன் ஒன்பது மாதங்களாகின்றன..... இன்னமும் வந்தபாடில்லை....

★★★★★

அழுகையினூடே அவள் சொன்னதைக் கேட்டபோது எனக்குச் சுந்தரத்தின்மேல் ஆத்திரம்தான் வந்தது...... வாழ வேண்டிய வயதில் அனுபவிக்கவேண்டிய நேரத்தில் அவளைத் தனியே விட்டுவிட்டு ஒன்பது மாதமாக என்ன ஏஜென்சி வேலை?.... அவளிடம் கேட்டு அவளை மேலும் சங்கடத்தில் ஆழ்த்த விரும்பாமல் பேச்சை வேறுதிசைக்கு மாற்றினேன்...

அதன் பின் நான் தேவகியிடம் இது பற்றிப் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டேன்..... அவளாக ஏதாவது சொன்னாலன்றி நானாக எதுவுமே கேட்பதில்லை...... என் கணவரிடம் சொன்னபோது அவர் சொன்னார், தேவகி பாவம் ஆனால் நாங்கள் என்ன செய்யிறது அவள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

இப்போதெல்லாம் தேவகி மேல் எனக்கு நட்பை மீறிய ஒரு பாச உணர்வு அதிகமாயிருந்தது. இத்தனை அடக்கமான, அழகான என் தேவகிக்கு இவ்வளவு சோதனையா?...... இறைவா! அவளுக்கொரு நல்வழியைக் காட்டு என்று வேண்டிக் கொள்வேன். நான் அவளை என் சகோதரி மாதிரியே நினைத்துக் கொண்டேன். கோயிலுக்கு, படத்துக்கு, ஜெராட் வீதிக்கென்று அவளையும் அழைத்துப் போவேன்.

ஒரு திங்கட் கிழமை தேவகி பாடசாலைக்கு வந்தாள். மிகவும் சோர்ந்து போயிருந்தாள். என்ன விடயமென்று கேட்டபோது கண் கலங்கினாள். சனிக்கிழமை இரவு தன் கணவனின் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குப் போனதாயும், அங்கே சில பெண்கள், "எங்க உங்கட புருஷன், அங்கேயே தங்கிட்டாரா? அல்லது அங்க வேற பொண்டாட்டி வைச்சிருக்காரா?" என்று நக்கலாகக் கேட்டுச் சிரித்ததாயும், தனக்கு அழுகை வந்ததாயும் சொன்னபோதே அவள் அழுது விட்டாள்..

எனக்கு அந்த முகம் தெரியாத பெண்கள் மீது ஆத்திரம் மீறிட்டது... சிரித்தவர்களெல்லாம் பெண்களா? அடுத்தவர்கள் சோகத்தில் சுகம் காண்போர்கள் இங்கிதம் தெரியாதவர்கள். தேவகி தொடர்ந்தாள், "அது பரவாயில்லை நான் சாப்பிட்டிற்று கழுவ வோஷ் ரூமுக்குப் போனேன், அங்க அதில ரெண்டுபேர் சொல்லிக் கதைக்கினம்,........" சொல்லமுடியாமல் விம்மினாள் தேவகி. மெல்ல அவளை என்னோடு அணைத்துக் கொண்டேன்... விம்மியபடி சொன்னாள், அவையள் சொல்லினம் சும்மாவா அவன் இவ்வளவு நாளும் வராமல் நிக்கிறான், அவசரமாக கலியாண எழுத்து நடந்ததாம்...... அங்க ஊரில இவள் ஆரோட தொடுப்போ, பிறகு விஷயம் தெரிஞ்சுதான் அவன் விட்டிட்டுப் போயிட்டானாம். இதைச் சொல்லியவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்... "ஏய்! என்ன இது அந்த மரமண்டையள் சொன்னாப் போல எல்லாம் உண்மையாகுமா? இதுக்கெல்லாம் அழாதையம்மா, பிளீஸ்....."

★★★★★

அன்று தேவகி மிகவும் உற்சாகமாயிருந்தாள். அவளின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அது தெரிந்தது. அவளாகச் சொல்லட்டுமென்று காத்திருந்தேன். "அடுத்த பத்தாம் தேதி எங்கட வெடிங் அனிவசரி, அவர் கட்டாயம் வருவாராம்" சொல்லும்போதே அவள் வெட்கப்பட்டாள். அவளது சந்தோஷத்தில் நானும் கலந்து கொண்டேன்.... இன்னும் ரெண்டு கிழமைதானே, பிறகென்ன அவர் வந்தோண்ண அவர்ர பாஸ்போட்டைக் கிழிச்சுப் போடு, அதோட உடனே ஒரு பிள்ளை பெத்துப் போடு, பிள்ளைப் பாசத்திலாவது மனுஷன் போகாமல் நிக்கும். நான் சொன்னதைக் கேட்டு அவள் வெகுநேரம் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் சொன்ன பத்தாம் தேதி வந்தது. ஆனால் சுந்தரம் வரவில்லை. தொடர்ந்து ஒரு வாரம் தேவகியும் பள்ளிக்கு வரவில்லை. போன் எடுத்து விசாரித்தேன். சுந்தரத்தின் அக்காவின் மகன் தான் சொன்னான், "மாமிக்கு சுகமில்ல, அதால்தான் பள்ளிக்கு போகேல்ல".

என் கணவருடன் அன்றே போய்ப் பார்த்தேன்...... பாவம்! நம்பி ஏமாந்து போயிருந்தாள். சுந்தரத்தின் அக்காவிடம் என் கணவன் தான் கேட்டார், ஏனக்கா! நீங்களாவது சொல்லக் கூடாதா? பாவம் எத்தனைக்கெண்டு பொறுக்கிறது..... அவளும் இந்த வயதில இப்படி இருக்க வேணுமா?... எத்தின தரம் சொல்லுறது. கலியாணம் கட்டினாத் திருந்துவானெண்டு பாத்தால் அதுவும் சரிப்பட்டு வராது போல கிடக்குது"........ சுந்தரத்தின் அக்கா சொன்னபடி கண்துடைத்தாள்..

★★★★★

இப்போதெல்லாம்தேவகியில் ஏகப்பட்ட மாற்றம்..... எப்போ

IRI
AUTO SERVICES
உங்கள் வாகனங்களின் சகல திருத்த வேலைகளுக்கும்...
S.J.ROOBAN TEL: (416) 696-5273



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் அமைதியாயிருப்பாள். கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டிருந்தாள். அன்று தேவகியின் விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு அவளை அகதியாக ஏற்று அவளிற்கான லேண்டட் (நிரந்தர வசிப்புரிமை) கிடைத்திருந்தது. அடுத்தவாரம் அதையொட்டி ஒரு சிறு பார்ட்டிக்காக என்னை அழைத்திருந்தாள். நானும், கணவரும் குழந்தையுடன் போயிருந்தோம். இரவுச் சாப்பாடு முடிந்தபின் கதைத்துக் கொண்டிருந்த போதுதான் அவள் சொன்னாள். ஷானி! (அப்படித்தான் என்னை அவள் கூப்பிடுவாள்) நான் என்ட கணவருடன் வாழக் குடுத்து வைக்காவிட்டாலும் உன்னைப் போல ஒரு நல்ல நண்பி, ஜீவா அக்காவைப்போல ஒரு நல்ல மச்சாள் கிடைக்கக் குடுத்து வைச்சிருக்கிறன்...... இதுதான் நான் உன்னோட பழகிற கடசிச் சந்தர்ப்பம்...... ஏனென்றால் நாளைக்கு இரவுக்கு எனக்கு Flight. இதுபற்றி நான் என்ட புருஷனுக்குக் கூட சொல்ல இல்ல. ஏன், என்ர மச்சாளுக்கும் இண்டைக்குத் தான் தெரியும்.

ஷானி நான் எவ்வளவு நம்பிக்கையோட என்ர வாழ்க்கையைத் தொடங்கினேன். ஆனால் இப்ப எல்லாம் நொருங்கிப் போச்சுது. ஊரில நான் டீச்சராயிருக்கேக்குள்ள இருந்த நிம்மதி இப்ப இல்ல. நான் எந்தத் தப்பும் செய்யாமல் ஏன் தண்டனை அனுபவிக்க வேணும். என்னாலயும் தனிய வாழமுடியும். இஞ்சயிருந்து நான் மனநோயாளி ஆகிறதைவிட, எங்கட ஊரில உழைச்சுச் சாப்பிட என்னால முடியும்....... இனி என்ர புருஷன் தேவையெண்டால் என்ன ஊரில வந்து சந்திக்கட்டும்!. அவரோட வாழ்ந்த அந்தச் சில மாதங்களின் நினைப்போட என்னால வாழமுடியும்....

★★★★★

இன்றிரவு என் தேவகிக்கு Flight. நான் எத்தனை தடுத்தும் அவள் பயணம் தடைப்படவில்லை. இன்று காலையில் அவளோடு போனில் கதைத்த போது சொன்னது இப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.......

.....ஷானி! வாழ்க்கையென்டிறது ஒருவரையொருவர் புரிந்து கொள்வதிலதானிருக்குது....... நான் அவரப் புரிந்து கொள்ளேல்ல, அல்லது அவர் என்னப் புரிந்து கொள்ளேல்ல.. என்ர முடிவு மாத்த முடியாதது. ஏனென்டால் இது பல மாதங்களாக நான் யோசிச்சு எடுத்த முடிவு. ஆறு எப்பவுமே முன்னோக்கித் தான் பாயும்......... ஆனா உடைக்க முடியாத தடைவந்தால் ஆறும் பின்னோக்கிப் பாயும்......... பாயவேணும்........ இது நியதி....

★★★★★

(யாவும் கற்பனையல்ல.)

# பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

**"ரோஜா" வாசகர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்!**



~ ரி.வி.எல்.ஏ. பப்ளிக்கேஷன்ஸ் ~ கரன் கிராப் ~
~ பெஸ்ட் வே மார்ட் ~ குவாலிட்டி பிரின்டிங் ~
~ 6 குமார்ஸ் ~ பொறி நுட்பம் ~ மகாராணி ~
~ பிள்ளையார் ரேடர்ஸ் ~ ராகப் பிரவாகம் ~
~ எஸ்.கே. பாலேஸ் றைவிங் ஸ்கூல் ~
~ ஸ்ரீ அன் பிரதர்ஸ் ~ இளைய நிலா ~
~ டிப்பனர் மக்ஸ் சோவே ~ மஞ்சுளா பாஷன் ~
~ ரிஷி'ஸ் இம்போட்டிங் எம்போரியம் ~
~ லிங் கொம்பியூட்டர் சிஸ்டம் ~
~ ஏ.ஆர்.கே மார்க்கட் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க வி த் தோ ட் ட ம்

## மாத விலக்கு

அன்னை தந்தைக்கு
அண்ணன் தம்பிக்கு
கணவன் மாமா மாமிக்கு
கண்மணியான குழந்தையர்க்கு
மாடாய் உழைத்து
ஓடாய்த் தேய்ந்து
மாயும் மங்கைக்கு
மாதம் ஒருமுறை
கடவுள் அளிக்கும்
கட்டாய லீவு...



## கா...த...ல்

காலங்கள் மாறினாலும்
காவல்கள் போட்டாலும்
காடு மலைகள் கடந்தாலும்
காதல் அது மாறாது!...

- நாதன் -

## நிம்மதி

நித்திரை கொள்வதில்
நிம்மதி தோன்றும்
நீண்ட நித்திரை
மரணம் என்பதால்
நிச்சயம் மரணம்
நிம்மதி தருமே?...

- சகி -
பிராங்போட்

## தாய்

பத்துமாதம் சுமந்து
பெற்றெடுப்பாள்....
தன் இரத்தத்தை பாலாக
பருகவைப்பாள்.....
தாலாட்டி சீராட்டி
வளர்த்திடுவாள்....
தாய் என்னும்
அன்பு தெய்வம்!...



- அனு -

## காதலி

என் அன்புக் காதலியே
நீயே என் ஆருயிரே...
ஏழேழு ஜென்மத்திலும்
நீயே என் இதயத்திலே...

- நரேன் -

## புத்தாண்டு

மலர்கின்ற புது ஆண்டில்
மறைந்திடட்டும் துன்பங்கள்
மலர்கின்ற இன்பங்கள்
தொடரட்டும் என்றென்றும்...

- அஸ்வின் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவா சின்னத்தம்பியின்...

# இன்னார்க்கு இன்னார்........

ஆகஸ்ட் இதழின் தொடர்ச்சி....

அது எமது கலாச்சாரத்திற்கோ, பண்டாட்டிற்கோ அழகல்ல என்றால் பொருந்தும். இவைகளுக்கு அமைந்தாற் போலத்தான் எமது பழக்க வழக்கங்களில் மச்சான், மச்சாள்மாரை மணமுடிக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கும் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இவை கட்டாயம் என்றில்லை. எம்முறையில் இன்னார் இன்னாரை மணமுடிக்கலாம், மணமுடிக்கக் கூடாது. இவைகளுக்கு அப்பாற்பட்ட இன்னோர் இடத்தில் இஷ்டப்படி மணம் முடிக்கலாம் என்கிறது எமது கலாச்சார பழக்கவழக்கங்கள். இதில் தப்பேதும் இல்லையெனலாம். மச்சான் மச்சாளைத்தான் முடித்தாக வேண்டும், அதாவது மச்சாள் தவிர்ந்த மற்றையோரை மணமுடிக்கமுடியாது என்கிறது எமது பண்பாடு. இவை கட்டுப்பாடு. இதைமீற நாம் இடமளிக்கக் கூடாது. என்பதற்காகத்தான் எமது பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை நாம் இளம் சந்ததியினருக்கு நன்கு தெரியப்படுத்த வேண்டும்.

அமெரிக்காவிலே ஒருவர் ஒருவரை மணமுடிக்க வேண்டுமாயின் இரத்தப் பரிசோதனை செய்து இருவரின் இரத்த "குறூப்" புகள் ஒத்துப் போவனவாக இருந்தால் மட்டும்தான் நீர் விரும்பியவரை மணமுடிக்க முடியும். அவர்கள் சத்தியவான் சாவித்திரியாக கூட இருக்கலாம். இரத்தப் பரிசோதனைதான் அமெரிக்காவில் திருமணத்தை நிச்சயிக்கிறது என்றால் பொருந்தும். நான் நேரில் பெற்ற அனுபவம் வேண்டுமானால் அறிந்து பாருங்கள். இவைகளை ஒப்பு நோக்கும் போது எமது சமூகத்தில் அனுபவத்தின் அதாவது சித்தாயுள் வேதத்தின் பிரதிபலனோ என்னவோ மச்சாள்மாரினது இரத்த குறூப் ஒத்துவரும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஏனென்றால் எம்மவர்களில் அனேகமானவர்கள் இதே வழித் தோன்றியவர்கள். அப்படியிருக்கும் போது எப்படி மச்சான், மச்சாள் மாரை மணமுடிப்பது தவறு தானே என்று இங்குள்ளோரைப் பார்த்து மனம் குழம்புகிறீர்கள்.

இங்கு நடைபெறும் சீரழிவுகளை, இதனால் பாதிப்புற்றவர்களைக் கணக்கெடுங்கள். எவ்வளவு விவாகரத்துக்கள், எவ்வளவு பெற்றோரை இழந்த பிள்ளைகள், திருமணமே நடவாத எத்தனை மக்கள், இவைகளையெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தால் புரியும் எமது பண்பாடு, பழக்க வழக்கங்களினால் எவ்வளவு நன்மை இருக்கிறது என்பது. இங்கு சில சமூகங்களைக் குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. அவர்கள் ஒன்றுவிட்ட அக்கா, தங்கை உறவு முறைகளை எப்படிப் பேணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தால் புரியும். எதிர்காலத்தில் எங்கள் சமூகத்திலும் என்னென்னவோ எல்லாம் நடக்கலாம். இதற்கு முன்னேற்பாடாக நாம் நடந்து நம் பண்பாட்டினை, பழக்கவழக்கங்களை பேணிக்காக்க வழிவகை செய்தல் வேண்டும்.

மச்சாளை மணமுடிப்பது நாகரிகமாகாது என்று சில முன்னோடிகளுக்குத் தோன்றலாம். நியாயம்! ஆனால் எதிர் காலத்தில் எம் இளம் சந்ததியினர் எவ்வளவோ பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியேற்படும். எங்களது சமூகத்திலும் எவ்வளவோ பிரிவுகள். இவை காலப்போக்கில் சரிப்பட்டு வந்தாலும், எம் உறவினர்களிடமும் ஆணோ, பெண்ணோ கிடையாமல், எங்கள் சமூகத்திலும் எவரும் கிடையாமல், பருவம் கடந்து இன்னோர் சமூகத்தில் ஒன்றின் பின் அலைய, அவன் அடிக்க வெருட்ட, ஒருநாளோ இரண்டுநாளோ பழகி உதைத்து அனுப்ப ஒவ்வொரு சமூகமாக ஏறி இறங்க வேண்டிய துர்பாக்கிய நிலை தோன்றும் என்பதை சிந்திக்கத் தவறி விடாதீர்கள். உதாரணமாக ஆடுகள் மாடுகளோடும், கழுதைகள் ஒட்டகங்களோடும் ஓடித்திரிவது போன்ற நிகழ்வுகள், பார்க்கின்றவர் கண்ணுக்கு புதினமாக இருக்காது போனாலும், பரிதாபமாகி விடும் என்பதுதான் கவலைக்கிடம்.

கடந்த காலங்களில் ஒருவனுக்கோ, ஒருத்திக்கோ உறவினருக்குள்ளோ, ஊருக்குள்ளோ மணமுடிக்க முடியாது போகும் பட்சத்தில் இன்னோர் உறவினரில், இன்னோர் ஊரில் பெண் கேட்டு அலைவது மானப் பிரச்சனையாகவும், கௌரவப் பிரச்சனையாகவும் உருவெடுத்ததோர் காலம், இவர்கள் ஏதோ களங்கப்பட்டவர்கள், எதுக்கும் வழி வகை இல்லாதவர் என்ற ஒரு விதமான கண்ணோட்டம் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இன்றைய சமகால நிகழ்வினால் பாதிப்புற்ற மக்கள் யாவும் நாடுவிட்டு நாடுசென்று மணமகளை, மணமகனை தேடவேண்டிய துர்பாக்கிய நிலை சர்வ சாதாரணமாக இருந்தாலும், இவைகட்கும் வழிவகை இல்லாதவர் எது செய்வர். மனக்குமுறலோடு இல்வாழ்க்கையின் சிறப்பினை அனுபவிக்க வாய்ப்பேற்படாத துர்ப்பாக்கிய சாலிகளாக ஓர் புதுவித கலாச்சார பழக்கவழக்க பண்பாட்டினோடு "பியர்" போத்தலும் கையுமாக தெருவீதி நடக்கின்ற தேவடியாள் கூட்டத்தோடு குலாவுகின்ற குலமகனாய், குலமகளாய் குடும்பம் நடாத்த முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவைகள் மேல் வெறுப்பேற்பட்டு கூறாமல் சந்நியாசம் கொள்வர் என்று நம்புவதற்கும் இல்லை. எமது சமூகங்களின் மத்தியில் உறவினர்களாகவும், நண்பர்களாகவும் வாழ்ந்து வந்து கொண்டிருப்பார்கள். காணத்தான் போகின்றோம், கண்டும் வருகின்றீர்கள் என்றால் மறுப்பதற்கும் இல்லை.

இந்திய கலாச்சார வழி வந்தவர்கள் என்று பலராலும் வர்ணிக்கப்பட்டாலும் அங்கு அக்காவின் மகளை அதாவது மருமகளை ஒருவர் மணமுடிக்கின்ற கலாச்சாரம் உண்டு என்று அறிகிறீர்கள். அதுபோல மச்சாளை மணமுடிக்கின்ற கலாச்சாரமும் இருந்து வருவதாக ஏதோ வாயிலாக அறிகிறீர்கள். இவைகளை எண்ணி நாம் அவ்வளவு அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. தவறானவை என்று கருதப்படுபவை தமிழரிடம் தொடர்ந்து நீடிக்கப் போவதில்லை. ஆனால் நாம் சென்று கொண்டிருக்கும் பாதை சரியா என்பதுதான் சிந்திக்க வேண்டியதாகும். இப்படி நடந்தால் தவறில்லை என்பதை தீர்க்க தரிசனமாக சிந்திக்க வேண்டியதுதான் தமிழரின் எதிர் காலத்தை நவீனமயப்படுத்தும்.

உதாரணமாக கிறீஸ்தவ மதங்களின் குருமார்களில் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் மணமுடிக்கலாம், இன்னோர் மதத்தைச் சேர்ந்த குருவானவர் மணமுடிக்க இடமளிப்பதில்லை. தவறென்றும், தவறில்லை என்றும் கொள்ள வேண்டியதும் பொதுமக்கள். இதேவேளை இந்து மதத்தில் சைவ சமயக் குருவானவர்கள் மணமுடித்து இல்லறத்தின் சிறப்பினைப் பெற்றவர்கள் தான் இல்வாழ்க்கையில் இருந்து வரும் எங்களுக்கு குருவானவராக இருக்க வேண்டும் என்று வேத நூல்கள் கூறுகின்றன. இவை ஒரு பிரச்சனையாக இருக்க நியாயமில்லை. மருமகளை மணமுடிக்க விரும்பாதவர் மச்சாளையோ, மறுபெண்ணையோ மணக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் இவர் இவர்களை மணக்க முடியாது என்பது தான் இங்கு கவனிக்க வேண்டிய கட்டுப் பாடு, கடமை, பண்பாடு, பழக்கவழக்கம். ஆகவே எமது முறைதலை உறவுமுறை என்பது எமது சமூகத்தின் வழித்தோன்றலை நன்மைதரக் கூடியனவாக நன்மதிப்பு உடையனவாக நிர்ணயிக்கும் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அன் பிரதர்ஸின்
## குறுக்கெழுத்துப் போட்டி இல: 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| | 32 | 33 | 34 | | 36 |

### இடமிருந்து வலம்.

1. பாரதிதாசனின் செல்லப் பெயர்.
7. தேர்
12. காட்டுமிருகம் (வலமிடமாயுள்ளது)
13. தமிழ் குழுக்களை ஒன்றுசேர்த்துப் பேச்சுவார்த்தை நடந்த இடம்.
17. அங்குலங்களின் சேர்க்கை.
24. பத்து அவதாரங்களில் ________ அவதாரமும் ஒன்று (வலமிருந்து இடம்)
27. சண்டை (வலமிருந்து இடம்)
32. முஸ்லீம்களின் பண்டிகை.

### மேலிருந்து கீழ்.

1. அமரகவி.
2. இந்துக்களின் முதல் நூல்
4. கம்பு
5. தேவர் (குழம்பி வருகிறது)
12. குதிரையின் அணிகலன்
15. கணவன்
23. வீடு

**உங்கள் பதில்கள் யாவும் 02-10-1994ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் இருவருக்கான பரிசுகளை ஸ்ரீ அன் பிரதர்ஸ் ஸ்தாபத்தினால் அனுப்பிவைக்கப்படும்.**

டிசெம்பர்/ஜனவரி இதழுக்கான குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் பெப்ரவரி/மார்ச் இதழிலே வெளியிடப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:1

குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிஷ்டசாலிகள்:-

1. சதீசன் யோகநாதன் - ஸ்காபுரோ
2. தவேந்திரா சிறிகாந்தா - பிரங்போட், ஜேர்மனி

**உங்கள் பதில்களை அனுப்பவேண்டிய முகவரி:**

**"ROJAH"**
**F.P.P.O., P.O. BOX 45593,**
**747 DON MILLS RD, DON MILLS,**
**ONT. M3C 3S4, CANADA.**

**அல்லது...**

**FAX: (416) 425-2462**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கி | 2 ளி | 3 ன் | 4 ற் | 5 ஈ | 6 ஸ் | 7 வூ | 8 ட் |
| 9 ளி | 10 வா | | 12 பா | 13 ச | 14 ம | 15 ல | 16 ர் |
| 17 யோ | 18 க | 19 ம் | 20 மா | 21 ன் | 22 ண | | 24 ப |
| 25 பா | 26 ன | 27 கா | 28 லை | | 30 வ | 31 ரை | 32 ஞ் |
| 33 ட் | 34 ம் | 35 டு | | 37 பி | 38 றை | | 40 ச |
| 41 ரா | 42 க | 43 ப் | 44 பி | 45 ர | 46 வா | 47 க | 48 ம் |
| 49 தூ | 50 ளி | | 52 டி | 53 ம் | 54 உ | 55 ற | 56 வு |
| 57 சா | 58 று | | | 61 பு | 62 ட | 63 வை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

## Sri Lankan, East & West Indian Groceries & Textiles

- இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
- உடன் ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி, மீன், இறால், கணவாய்
- இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட காஞ்சிபுரம், காஸ்மீர் சேலைகள்
- கூறைச் சேலைகள்
- சல்வார் கமீஸ்
- மணப்பெண் அலங்காரப் பொருட்கள்

**என்பவற்றை குறைந்த விலையில் நிறைந்த திருப்தியுடன் பெற்றுக் கொள்வதற்கு ஸ்காபரோ நகரில் நீங்கள் நாடவேண்டிய தனிப்பெரும் ஸ்தாபனம்**

## பிள்ளையார் டிரேடர்ஸ்

3060 Lawrence Avenue East (at Lawrence & Markham)
Scarborough, Ontario. M1G 1P6
Tel: (416) 438-7746


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI & BROTHER'S

நங்கையர் மனங் கவரும்
நவ நாகரீக ஆடைகளுக்கும்

வாலிப உள்ளங்களைக்
கொள்ளைகொள்ளும் ஜீன்ஸ், சேட்
வகைகளுக்கும்

RAJA, PYRAMID, RAMY போன்ற
CD வகைகளுக்கும்

இலங்கை, இந்திய, ஐரோப்பிய
நாடுகளுக்கு துரித பணமாற்றுச்
சேவைகளுக்கும்

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட
22 கரட் தங்க நகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

**ஸ்ரீ அன் பிறதர்ஸ்**



**இத்துடன் எமது ஸ்தாபனத்துக்குள்ளேயே இயங்கிக் கொண்டிருக்கிறது**

## "POWER OPTICAL"

**உங்கள் மூக்குக் கண்ணாடி தேவைகளையும்
பூர்த்தி செய்கிறார்கள்**

# ஸ்ரீ அன் பிறதர்ஸ்

1801 Lawrence Ave., Unit #5 (Lawrence/Pharmacy)
Scarborough, Ont.

**Tel/Fax: (416) 752-9960**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Typeset By: T.V.L.A. Publications (416) 425 2884 Printed By: Quality Printing Services (905) 513 7575